XI

# வித்யா தளம்

1-2

ஏப்ரல்-மே, 1947

DIGITIZED


FL
Q6ள211,N37
N47.11.1-2
209402



Photograph by G. W. Maw

HOMEWARD BOUND

## பொருளடக்கம்.


| | | பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | வைர வயல்கள் | 1 | 10 | மிருகத்தின் வீரச்செயல் | 14 |
| 2 | டாமியன் சந்நியாசி | 2 | 11 | பரிசுத்த மார்க்கு | 16 |
| 3 | கிராமத்திற்குச் சென்ற டாக்டர் தயாநந்தன் | 5 | 12 | அவலரூபியான அரசக் குமாரி | 17 |
| | | | 13 | ஆந்தையும் அன்புள்ள பையனும் | 18 |
| 4 | சீன அரசனும் அவனது பன்றியும் | 7 | 14 | கிளமெண்டினா பட்லர் | 19 |
| 5 | நன்றியுள்ள நாய் | 8 | 15 | ஸ்ரீ தியாகராஜர் | 20 |
| 6 | விஞ்ஞானத் துணுக்குகள் | 10 | 16 | பிரகாசமான தேசம் | 21 |
| 7 | தாந்தா பிரயாணம் | 12 | 17 | காணிக்கை சடங்கு | 24 |
| 8 | சிரிப்பாயோ! தடிப்பாயோ! | 12 | 18 | சாரணர் பகுதி | 25 |
| 9 | செய்தித் திரட்டு | 13 | 19 | நெய்யும் மோரும் கலந்துண்ணல் | 26 |



# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி XI ஏப்ரல், மே மீ 1947 வ௵ பகுதி 1, 2.


## வைர வயல்கள்.

முன்னொரு காலத்தில் ஆபட் அலி எனப்பட்ட குடியானவன் சிந்து நதிக்கருகில் வசித்து வந்தான் அவனுக்கு நிலபுலங்கள் மிகவும் விஸ்தாரமாய் இருந்தபடியினாலே அவன பணக்காரனாகக் கருதப்பட்டனன். அவன் தனவந்தனாயிருந்தபடியினால் திருப்தி உள்ளவனாயும் இருந்தான்.

ஒரு நாள் அவனிடத்தில் வயதிலும் அறிவிலும் முதிர்ந்த புத்த சந்நியாசி ஒருவர் வந்து தான் பார்த்துள்ள அநேக விலையுயர்ந்ததும், அழகுள்ளதுமான பல பொருட்களைப்பற்றி அவனிடம் பிரஸ்தாபிக்கலானார். அந்த சந்நியாசி ஆபட் அலியை நோக்கி, "இந்த உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் அருமையானது வைரமே உனது பெருவிரல் அளவுள்ள வைரத்தை நீ உடையவனாயிருந்தால் அதன் மதிப்பு சுற்று வட்டாரத்திலுள்ள அனேக மைல் தூரத்திலுள்ள நிலங்களின் மதிப்பைக்காட்டிலும் அதிகமாய் இருக்கும். உனக்கு ஒரு வைரசுரங்கமே சொந்தமாயிருந்தால் நீ உன்னுடைய ஒவ்வொரு பிள்ளையையும் பெரிய ராஜபதவிக்கு கொண்டுவந்து விடலாம்" என்றார்.

அன்றிரவு ஆபட் அலி நிம்மதியாக படுக்கைக்குச் செல்லவில்லை. இராமுழுவதும் அவனுடைய மனது அதிருப்தியினால் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவனுக்குள்ள பொருட்களிலொன்றும் திருட்டு போகவில்லை என்றபோதிலும் அவன் மனதில் ஏதோ குறைவு இருப்பதை அவன் உணர்ந்தான். மறுநாள் அதிகாலையில் ஆபட் அலி பௌத்த பிக்ஷுவினிடம் சென்று அந்த வைரங்கள் எவ்விடத்தில் கிடைக்கும் என்று கேட்டான்.

அதற்கு அவர், "இரு பெரிய மலைகளுக்கிடையில் ஒரு பெரிய நதி ஓடி வருகையில் அது பளிங்கு போன்ற வெள்ளை மணல் படுக்கைகளை உண்டாக்கிக்கொண்டு ஓடிவரும். அவ்வித வெண்மையான மணற்பாங்கான இடத்திலேதான் அநேகமாய் வைரங்கள் அகப்படும்" என்றார்.

ஆபட் அலி உடனே தனக்கு சொந்தமான பண்ணைகளை விற்று பணத்தைத்திரட்டிக் கொண்டு, தனது மனைவி மக்களை உறவினரது ஆதரவில் விட்டு விட்டு வைரங்கள் அகப்படும் நதியை நாடிச் சென்றான். அவன் முதலில் வட இந்தியாவிலுள்ள மலைகளில் தேடினான். சித்தி பெருமையால் ஆப்பிரிக்காவிற்குச் சென்று நீலநதிக்கு அப்பாலுள்ள சந்திர மலை

களில் தேடினான். பின்பு பல தீவுகளுக்குச் சென்று அங்கிருந்து ஐரோப்பாவுக்குச் சென்றான். ஆனால் அவன் தேடியலைந்து வைரக்கனிகளுள்ள நிலத்தை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் எல்லாம் முடிந்த பிறகு வயோதிபனாக ஹெர்க்யூலிஸின் தூண்களுக்கு (Pillars of Hercules) இடையிலுள்ள ஜிப்ரால்டர் ஜலசந்தியை அடைந்தான். அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலிருந்து அவனை நோக்கி ஒரு பெரிய அலை எழும்பி வருவதைக் கண்ட அவன் கடலில் குதித்து மூழ்கி மாண்டான்.

நிற்க, ஆபட் அலியினது பண்ணைகளை வாங்கின மனிதன் ஒருநாள் தனது ஒட்டகத்தின் தாகத்தை தீர்ப்பதற்காக தன் தோட்டத்திற்கருகிலுள்ள சிறு ஓடைக்கு ஓட்டிச்சென்றான். அவன் அந்த ஓடையின் மணல் பாங்கான கரையில் நின்றபோது வெள்ளிய மணலிலிருந்து ஒரு பிரகாசம் தோன்றி தோன்றி மறைந்தது. கீழே குனிந்து எடுத்து பார்த்தபோது ஒரு கறுப்பு கல் வானவில்லில் காணப்படும் ஏழு வர்ணங்களையும் வாரியிறைப்பதைப் போன்ற பிரகாசத்தோடு மினுங்குவதைக் கண்டான்.

ஆகவே அவன் அதை எடுத்துச் சென்று வீட்டிலுள்ள மாடத்தின் மீது வைத்தான். சில நாட்கள் கழித்து, முன்பு ஒரு சமயம் ஆபட் அலியை கண்டுவந்த அந்த சந்நியாசி வந்து சேர்ந்து மாடத்தில் வைக்கப்பட்டுள்ள கறுப்புக்கல்லைக் கண்டு சந்தோஷ மிகுதியால் "இதோ இங்கு ஒரு வைரம் இருக்கின்றதே! ஆபட் அலி திரும்பி விட்டானோ?" என்று கேட்டார். அப்பொழுது அப்பண்ணையின் சொந்தக்காரன் "அது வைரக்கல்லல்ல. அது நான் ஆற்றங்கரையில் பொறுக்கின ஒரு சாதாரண கறுப்புக்கல்லாகும்" என்றான். அந்த சந்நியாசி பின்னும், "இது நிச்சயமாகவே ஒரு வைரக்கல்தான்! இதனுடைய பிரகாசமே காட்டிக்கொடுக்கவில்லையா?" என்று உரைத்தார்.

ஆகவே அவ்விருவரும் ஓடைக்கு ஓடிச் சென்று தெளிவான மணலை கிளறி கிண்டி பார்த்தபோது ஒரு அழகிய வைரக்கல் கிடைத்தது. திரும்பவும் கிளறியபோது மற்றொருகல் கிடைத்தது. இவ்வாறு பற்பல அழகிய, பெரிய, விலையுயர்ந்த கற்கள் அகப்படலாயின.

உலகத்திலேயே மிக்க செல்வாக்கும் பிரக்கியாதியும் பெற்றுள்ள கோல் கொண்டா வைரக்கனிகள் இவ்வாறுதான் கண்டு பிடிக்கப்பட்டனவாம். உலகத்திலுள்ள வைரங்களில் பெரியன என்று மதிக்கத்தக்க கோல்கொண்டா வைரமும், ஆர்லாப் (Orloff) வைரமும் இந்த வைர சுரங்கங்களிலிருந்துதான் கண்டு பிடிக்கப்பட்டன. ஆபட் அலி அந்நிய நாடுகளுக்குச் சென்று, பட்டினி, குளிர் முதலியவற்றால் கஷ்டப்பட்டு கடைசியில் உயிரையும் இழந்ததற்கு பதிலாக தன் வீட்டிலேயே நிலைத்திருந்து தன் சொந்த தோட்டத்தைத் தோண்டி பார்த்திருந்தால் அவனுக்கு அநேக ஏக்கர் பரப்புள்ள வைரக்கனிகள் கிடைத்திருக்குமல்லவா? அவன் விரும்பிய செல்வத்தை மனதார அனுபவித்திருக்கலாமல்லவா?

———:o:———

## டாமியன் சந்நியாசி

1840ம் வருஷம் ஜனுவரி 3ம் தேதி பெல்ஜியம் தேசத்தில் ஜோஸப் என்ற பெயருள்ள பையன் பிறந்தான் இருபது வருஷங்களுக்குப் பின் அவர் ஒரு பாதிரியாராகி டாமியன் என்ற பெயரை எடுத்துக்கொண்டார். எல்லாராலும் அவர் டாமியன் சந்நியாசி என்று அழைக்கப்பட்டு வந்தார்.

அவர் சிறு பையனாயிருந்தபோது வயலில் வேலை செய்து வந்தார். அவர் வாலிப வயதை அடைந்தபோது பார்க்க மிக்க அழகும், வலிமையும் உடையவராகத் தோன்றினார். அவரது தமையனும் ஒரு பாதிரியா யிருந்தபடியினால் அவர் தாமும் ஒரு பாதிரியாக விரும்பினார். அவரது தமையன் ஹவாயி தீவிற்குச் சென்று அங்குள்ள ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற விருப்பம் கொண்டு இருந்தார். ஆனால் அவர் திடீரென்று மரித்துப்போனார். அவர் மரணத்தருவாயிலிருந்தபோது, தம்பியாகிய டாமியன் என்ப



வர் தானே ஹவாயி தீவுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உதவி செய்வதாகத் தன் தமையனுக்கு வாக்குக்கொடுத்தார். தமையனும் மனச்சாந்தியுடன் மரித்தார்.

ஒன்பது வருஷங்களாக டாமியன் சாமியார் ஹவாயின் மக்களுக்காக உழைத்தார். அந்த ஒன்பது வருஷங்களுக்குள்ளாக அவர் அங்குள்ள பற்பல பெரிய இடங்களில் ஒன்பது கோயில்களை தமது கைகளினாலேயே கட்டி முடித்தார். அச்சமயத்தில் குஷ்டரோகம் வெகு அதிகமாய் பரவி வந்தது. சர்க்கார் அங்குள்ள குஷ்டரோகிகள் யாவரையும் மொலாகாய் தீவிற்கு அனுப்பிவிட்டனர். அவ்விடத்தி



டாமியன் சந்நியாசி.

லிருந்து அவர்கள் மறுபடி திரும்பி வருவதே கிடையாது

ஒருநாள் வாலிப சந்நியாசியான டாமியன் பிரபல ஒரு அத்தியட்சரின் பிரசங்கத்தைக் கேட்டார் அந்த அத்தியட்சர் மக்கள் குஷ்டம் என்னும் கொடிய வியாதியால் படும் கொடிய வேதனையை விவரித்துரைத்தார் இதைக் கேட்ட டாமியன் சந்நியாசியின் உள்ளம் உருகியது. அவர் உடனே அத்தியக்ஷரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தான் கட்டியிருந்த ஆடையோடு குஷ்டரோக தீவுக்கு புறப்பட்டு சென்றார்.

குஷ்டரோகிகள் வசித்து வந்த அவ்விடம் உலகத்திலுள்ள இடங்களில் மிகவும் பயங்கரமும் துக்கமும் நிறைந்த ஒரு இடமாகும். அங்கு உள்ள 700 அல்லது 800 மக்களும் நம்பிக்கை இழந்து கடவுளை மறந்து சாவையே எதிர்பார்த்து வாழ்ந்து வந்தனர். அவ்விடத்தில் ஒருவித வசதியும் கிடையாது. மரங்கள் கூட அத்தீவில் இல்லை எவ்விடத்திலும் ஒரே மணல். அவர்கள் மரக்கட்டைகளையும் இலை சருகுகளையும் மேலே கூரைபோல செய்து கொண்டு அதன் நிழலில் வசித்து வந்தனர். டாமியன் சந்நியாசி கூட சில காலத்திற்கு ஒரு மரத்தினடியில் வசிக்க வேண்டியதாயிற்று. அக்குஷ்டரோகிகளுக்கு சரியான உணவும், உடையும் கிடையாது. அவர்கள் அழுக்கும் அசுத்தமுமாய் வசித்து வந்தனர். அவர்கள் உடம்பிலிருந்து ஒருவித துர்நாற்றம் வீசியது. ஒரு வாரத்திற்குள் குறைந்தது 10 பேராவது இறந்துபோவார்.

டாமியன் சாமியார் அப்போது 33 வயதுள்ள இளங்காளையாக விளங்கினார். கடுமையான வேலைகள் பல செய்து தமது பலத்தைப் பெருக்கி கொண்டார் அவர் எப்போதும் முக மலர்ச்சியுடனும் பொலிவுடனும் விளங்குவார். தானும் எதாவது ஒரு நாள் குஷ்டரோகியாகி விடுவோம் என்று அவருக்கு நிச்சயமாக தெரிந்தபோதிலும் அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்வதில் அவர் பின்வாங்கியதில்லை. அவரே அவர்களுக்கு மருத்துவராகவும் போதிப்பவராயும், நியாயாதிபதியாயும், குருவாயும் தோட்டக்காரனாயும், சமையற்காரனாயும், பிணக்குழி பறிப்பவராயும் இருந்து வந்தார்.

அவர் பெரிய நகரங்களிலிருந்து மரக்கட்டைகளைத் தருவித்து, குஷ்டரோகிகளின் உதவியைக் கொண்டே அவர்களுக்கு வீடுகள் அமைத்தார். அவர் ஒரு குன்றின்மேல் வற்றாத நீரூற்று ஒன்றினைக்கண்டு, பட்டணத்திலிருந்து குழாய்களைத் தருவித்து பொருத்தி இவைகளின் உதவியால் அவர் ஒவ்வொரு வீட்டிற்குள் ஜலம் போகுமாறு செய்தார். அவர் ஒரு கோவிலையும் ஒரு வைத்தியசாலையையும் நிறுவினார். அவர் ஒரு பெரிய கல்லறை தோட்டத்தைக் கட்டி அதனுள் 1600 மக்களை இரண்டு வருஷகாலத்திற்குள் அடக்கம் செய்

தார். அவர் தாமே தனது கைகளால் மரித்துப்போன அனேகருக்கு சவப்பெட்டிகள் செய்தும், குழிகள் தோண்டியுமுள்ளார். அவர் அந்த பரிதாபகரமான நிலையிலிருந்த மக்களுக்கு கல்வி புகட்டினார் அவர்களது காயங்களைக் கட்டினார். சில நோயாளிகளின் கைகள் குஷ்டத்தால் பீடிக்கபட்டு விரல்கள் சூம்பிப்போயிற்று. அவர்களுக்கு டாமியன் சந்நியாசி தாமே உணவை ஊட்டினார். இவ்வாறு அவர் ஏழை மக்களுக்கு உதவிபுரிவதை கிறிஸ்துவிற்குச் செய்யும் தொண்டாகவே எண்ணி மிக்க மகிழ்ச்சியும், ஊக்கமும் கொண்டு உழைத்தார்.

ஐந்து வருஷங்களாக டாமியன் சந்நியாசி தனியாகவே உழைத்தார். பிறகு மற்றொரு சாமியார் இவர் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்ள வந்தார் பின்பு ஒரு வைத்தியரும் சில பெண்களும் உதவிக்கு வந்தனர். இவ்வாறு அக்குஷ்டரோகிகளின் வாழ்க்கை நாளடைவில் சந்தோஷமும் திருப்தியையும் தருவதாக மாறியது.

பத்து வருஷங்களுக்குப்பின் ஒருநாள் டாமியன் சாமியார் கொதிநீரில் தனது கால்களை விட்டபோதிலும் அவை வருத்தாமலிருப்பதைக் கண்டு தனக்கும் குஷ்டநோய் பரவி விட்டதோ என சந்தேகித்தார். வைத்தியரைக் கேட்டு தனது சந்தேகத்தை நிவிர்த்தி செய்து கொண்டார். டாமியன் சந்நியாசிக்கு தான் குஷ்டரோகியானது ஒரு அதிர்ச்சியையும் தரவில்லை. ஏனெனில் அவர் முதலிலிருந்தே இந்த கொடிய நோய் எப்போது நம்மை பற்றுமோ என்று எண்ணிக்கொண்டிருந்தார்

அவர் தமது வீட்டாருக்கு ஒன்றையும் அறிவிக்கவில்லை. ஆனால் அத்தியக்ஷருக்கு மாத்திரம் பின்வருமாறு கடிதம் எழுதினார். "நான் முன்புபோல நகரத்திற்கு திரும்பி வரமுடியாது. ஏனெனில் நானும் குஷ்டநோயால் பீடிக்கப் பட்டேன். நம்மைப் படைத்த ஆண்டவர் நன்மையானதை எனக்குச் செய்துள்ளபடியால் நான் மனதில் களிப்புடன் 'உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக' " என்று எழுதினார்.

அடுத்தவாரம் பிரசங்கம் செய்யத் துவக்கிய போது குஷ்டரோகிகளான நாம் என்று தமது பிரசங்கத்தைத் துவக்கினார். இவ்வாறு அன்றுமுதல் டாமியன் சாமியாருக்கும் குஷ்டரோகிகளுக்கும் ஒரு புது தொடர்ப்பு உண்டாயிற்று. இதற்கு பிறகு குஷ்டரோகிகள் முன்பு செய்ய விரும்பாதவைகளையெல்லாம் விரும்பி செய்யலாயினர். பிறரை தூஷிப்பதையும், மதுகுடித்தலையும் அறவே ஒழித்தனர்.

டாமியன் சந்நியாசி வருவதற்குமுன் ஒரு செடியின் வேரிலிருந்து தயாரிக்கப்பட்ட மதுவை அருந்தி வந்த அம்மக்களின் நடுவேயிருந்து குடிப்பழக்கத்தை அகற்ற டாமியன் சாமியார் தாம் சௌக்கியமாய் இருந்த காலத்தில் எவ்வளவோ பாடுபட்டும் நிறுத்த முடியவில்லை. ஆனால் அவரும் அவர்களின் ஒரு குஷ்டரோகியாக மாறினவுடனே அவ்வழக்கம் மறையலாயிற்று. ஆனால் இவ்விஷயம் அம்மக்களுக்கு பிடிக்கவில்லையாதலால், அவர்களில் சிலர் டாமியன் சாமியாரை வருத்தினர்.

இவ்வாறு அவர் பின்னும் ஆறு வருஷம் ஜீவித்திருந்தார். அக்காலம் முழுவதையும் அவர் நேசித்த ஏழை மக்களுக்கு உதவி புரிதலிலேயே செலவிட்டார். அவர் மரணத் தறுவாயிலிருந்தபோது, "அன்புள்ள ஆண்டவர் என்னைத் தம்மோடு வைத்துக்கொள்வதற்காக அழைக்கிறார்" என்று சொன்னாராம். அப்போது ஒரு பாதிரி அவரைப் பார்த்து, ஐயா நான் உமது தயாளம் நிறைந்த இருதயத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக உமது மேல் சட்டையை எனக்குத் தரமாட்டீரா? என்று கேட்க அதற்கு அவர், "மகனே எனது சட்டையில் குஷ்டநோய் கிருமிகளைத்தவிர வேறு என்ன உள்ளது?" என்று அன்பு ததும்ப கூறிய மறுமொழி அங்கு சுற்றி நின்ற யாவரின் கண்களிலும் கண்ணீரை வருவித்தது.

அவர் மரித்தபின்பு, அவரது விருப்பத்திற்கிசைய ஒரு குறித்த மரத்தினடியில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் முதல் முதலில் மொலாகாய் தீவிற்கு வந்தபோது சில காலம் வசித்துவந்த மரத்தினடியிலேதான் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.



அவரது மரணத்திற்குப் பின் அவரை அறியாத ஒரு அத்தியக்ஷர் அவரைப்பற்றி கேவலமாக எழுதினார். இதை வாசிக்க நேர்ந்த ஆங்கில எழுத்தாளரான 'ராபட் லூயி ஸ்டீவன்ஸன்' என்பார் தாமும் டாமியன் சாமியாரைப் பற்றி எழுதலானார். அந்நூலில் அவர் அந்த அத்தியக்ஷரின்மீது தமது கோபத்தைக் காட்டி அவர் அத்தியக்ஷர்களின் உல்லாசமும், சொகுசுமான ஜீவியத்தை கண்டித்தும், ஏழை மக்களுக்காக தங்கள் உடல் உயிர், ஆவி இவற்றை தியாகம் செய்யும் தியாகிகளைப் புகழ்ந்தும் எழுதியுள்ளார்.

டாமியன் சாமியார் தன்னை மொலாகாய் தீவிலுள்ள ஏழைமக்களுக்கு தத்தம் செய்ததால் அவர் அத்தீவையும் அதில் வசிப்பவர்களின் நிலைமையும் பிறருக்கு எடுத்துக்காட்டிப் பணச் சகாயம்பெற்றார். அதற்கும் மேலாக தன்னைப்போன்ற சில தியாகிகளும் அத்தீவிற்கு வந்து அம்மக்களுக்காக உழைக்க உதவினார். தமக்குப்பின் அவர்களும் தம்மைப்போல் உழைப்பார்கள் என்கிற எண்ணமே அவருக்கு மிகவும் ஆறுதலையளித்தது.

அவர் மொலாகாய் தீவிற்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் பெரிய தொண்டு செய்துள்ளார். அவரது வாழ்க்கை சரித்திரமானது பிறநாடுகளிலுள்ள குஷ்டரோகிகளையும் சரிவர கவனித்து நடத்திவர அந்நாட்டு மக்களை ஏவியது. அவரது சரித்திரத்தை வாசித்த அநேக ஆண்களும் பெண்களும் தங்கள் வாழ்க்கையை ஏழை குஷ்டரோகிகளுக்கு உதவி புரிவதற்காக தியாகம் செய்யலாயினர்.

டாமியன் சாமியாரின் வாழ்க்கை ஒரு நக்ஷத்திரம்போல் பிரகாசித்து நம்மையும் தைரியமுள்ளவர்களாயும் தன்னலமற்றவர்களாயும் வாழ்க்கையை நடத்த உதவிபுரிகிறது.

—:o:—

# கிராமத்திற்குச் சென்ற டாக்டர் தயாநந்தன்

(பெப்ரவரி மாதத் தொடர்ச்சி)

ஒரு வாரத்திற்குப் பிறகு டாக்டர் தயாநந்தன் கிராமத்திற்கு வந்தார் அவர் முகம் சற்று மலர்ந்து காணப்பட்டது. கிராமத்து மக்களெல்லாம் அநேக கேள்விகளை கேட்பதற்காக அவரை சூழ்ந்து கொண்டனர் டாக்டர் அவர்களைப் பார்த்து, "உங்களில் சிலர் நிஜமாகவே உங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொண்டதைக் கண்டு மகிழ்கின்றேன் ஆனால் எல்லாருமல்ல உங்களில் சிலர் பழையபடி அசுத்த வாழ்க்கையையே நடத்தி வருகிறீர்கள். நீங்கள் அறிந்திருக்கும் வண்ணமாக நடந்தாலொழிய உங்களால் சுத்தமாய் வாழ இயலாது. கேட்பதற்கு ஏதாவது கேள்விகள் உண்டா?" என்றார்.

எல்லா மக்களும் உடனே "ஆம்! ஆம் நிறைய இருக்கிறது. இன்று ஆகாரத்தைப் பற்றி சில கேள்விகள்கேட்க விரும்புகிறோம்."

எஸ்றா:—செத்துபோன எருமை, ஆடு, மாடு இவற்றின் மாமிசம் உண்பதற்கேற்றதா?

டா. தயா:—ஏற்றதல்ல. அம்மிருகம் நோயுற்றுத்தானே இறந்திருக்க வேண்டும்? ஆகவே நாம் ஒருபோதும் தானாய் இறந்துபோன மிருகத்தின் மாமிசத்தை உண்ணலாகாது.

பிலிப்பு:—அப்படியானால் நாம் எப்படிபட்ட மாமிசத்தை உண்ணலாம்?

டா. தயா:—உணவிற்காகக் கொல்லப்படும் சுகதேகியான மிருகங்களின் மாமிசத்தை நாம் புசிக்கலாம்.

பிலிப்பு:—அரிசியும் பருப்பும் நல்ல உணவாகுமா?

டா. தயா:—நல்ல உணவுதான். ஆனால் அவை மட்டும் போதாது.

பிலிப்பு :—பிறகு வேறு என்ன சாப்பிட வேண்டும் ?

டா தயா :—தினந்தோறும் நாம் சில கீரை வகைகளை நமது உணவோடு சேர்த்து சாப்பிடவேண்டும்.

காத்தரின் :—கீரை வகைகள் அகப்படாவிடில் என்ன செய்வது ?

டா. தயா —எந்த காய்கறிகளும் சேர்த்துக் கொள்ளலாம் தக்காளி, கத்திரிக்காய், காரட், வெங்காயம், டர்னிப், முருக்கைக்காய், வெள்ளரிக்காய், மரோ, பீன்ஸ் முதலியவை மிகவும் சத்துள்ளவை

காத்தரின் :—நாம் தினந்தோறும் காய்கறிகள் சாப்பிட வேண்டுமா ?

டா. தயா :—அது மிகவும் நல்ல காரியம். ஒரு நாளில் ஒரு தரமாவது சாப்பிடுதல் வேண்டும்.

காத்தரின் :—எல்லா காய்கறிகளும் சமைத்தா சாப்பிட வேண்டும் ?

டா தயா :—காலரா அல்லது டைப்பாய்டு முதலிய தொத்து நோய்கள் நடமாடும் காலங்களில் பச்சையாக காய்கறிகள் சாப்பிடுதல் நல்லது ஆனால் தின்பதற்குமுன் அவை சுத்தமாக கழுவப்பட்டிருக்க வேண்டும்.

பிலிப்பு :—நாம் அரிசிதான் சாப்பிட வேண்டுமா ? சோள ரொட்டி சாப்பிடக்கூடாதா ?

டா. தயா :—ஏன் சாப்பிடக்கூடாது? சோள ரொட்டி அல்லது சோள கஞ்சி சாப்பிடுவது மிகவும் நல்லது. உண்மையில் அது அரிசியை விட மேலான உணவு கோதுமை, கேழ்வரகு முதலியவை சாப்பிடுவதற்கேற்ற தானியங்கள் தான்.

சூசன்னு :—பால் நல்ல உணவல்லவா ?

டா தயா :—ஆம் பால் சிறுவருக்கும், பெரியோருக்கும் ஏற்ற நல்ல உணவுதான் அதில் சந்தேகமில்லை.

பிலிப்பு :—நாம் அதிகமாக பாலை அருந்தலாமா ?

டா தயா :—ஒரு நாளைக்கு ஒரு சேர் பால் ஒரு சிறு குழந்தைக்கும், ½ சேர் பால் பெரிய மனிதருக்கும் சரியான அளவாகும். ஒவ்வொரு மனிதனும் அதிக பால் தரக்கூடிய ஒரு மாட்டை வளர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும்.

கிதியோன் :—நாம் நிறைய பாலை ஒரே நேரத்தில் குடிக்க வேண்டுமா ?

டா. தயா :—சாப்பிட்டு முடித்த சமயங்களிலெல்லாம் ஒரு பெரிய டம்பளர் நிறைய பால் சாப்பிடுதல் நலம்.

கிதியோன் —மிளகாய் சாப்பிடுவது நல்லதா?

டா. தயா :—மிளகாய் சாப்பிடுவதற்கேற்ற உணவல்ல

பிலிப்பு :—அப்படியானால் மிளகாய் சாப்பிடவே கூடாதா ?

டா. தயா :—நமது சாப்பாட்டிற்கு ருசி கொடுக்க வேண்டுமானால், ஒன்றிரண்டு மிளகாய் சாப்பிடலாம்.

பிலிப்பு :—எலுமிச்சம் பழமும் திராட்சை பழமும் தொண்டை கட்டும்படி செய்து விடுமா ?

டா. தயா:—பழங்கள் மக்களுக்கு சக்தியை அளிக்குமேயன்றி சளி பிடித்துக்கொள்ளுமாறு செய்யவிடாது.

நோவா :—மாம்பழங்கள் சாப்பிடுவது நல்லதா ?

டா. தயா :—நல்லதுதான், விசேஷமாய் வாழை பப்பாளி, கொய்யா, எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை முதலிய பழங்கள் உண்பதற்கு சிரேஷ்டமானவை.

நோவா:—பருப்புகள் சாப்பிடுவது நல்லதா?

டா. தயா :—ஆம். வேர்கடலை முந்திரிப் பருப்பு, தேங்காய் முதலிய பருப்பு வகைகள் உண்பதற்கு ஏற்றவைதான்.

பிலிப்பு :—ஒரு நாள் முழுவதும் அவற்றை சாப்பிட்டுக்கொண்டே இருக்கலாமா ?



டா. தயா :—அது தப்பு. அவற்றை சாப்பிட குறித்திருக்கும் வேளைகளில்தான் சாப்பிடலாம். சாப்பிடும் வேலைகளில தவிர மற்ற வேளைகளில் பருப்பகளும் மிட்டாய்களும் சாப்பிடலாகாது.

காத்தரின் :—சமையல் செய்கையில் நெய்யாவது எண்ணெய்யாவது சேர்த்துக் கொள்ளலாகாதா ?

டா. தயா:—நெய் இருந்தால் நெய்யை உபயோகிக்கலாம். இல்லாவிடில் எண்ணெயை உபயோகிக்கலாம். ஆனால் நெய்யை உபயோகிக்க முயலு.

பிறகு டாக்டர் தயானந்தன், இன்றைக்கு இவ்வளவு போதும் இப்போது போய் மிகவும் ருசியாய் சமைத்து சாப்பிடுங்கள். ஒரு நாளில் இரண்டு வேளைகளிலும் காய்கறி சாப்பிட மறக்க வேண்டாம். நான் நாளைக்குத் திரும்பி வருகிறேன். அப்போது ஜலத்தைப்பற்றி ஏதாவது கேள்விகள் எழுந்தால் அவற்றிற்கு உரிய பதில்களை சொல்கிறேன், போய் வருகிறேன். நமஸ்காரம்,

(தொடரும்)

—;o:—

## சீன அரசனும் அவனது பன்றியும்,

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சீன தேசத்திலே ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு அழகிய சிறு பன்றிக்குட்டியைச் செல்லமாக வளர்த்து வந்தான். அந்த பன்றி நாம் பார்க்கும் சாதாரண குட்டிகளைப்போல் சேற்றிலும் அழுக்கிலும் புரளாது. சுத்தமாய்க் குளிப்பாட்டப்பட்டு பரிமள தைலங்கள் பூசப்பட்டு நேர்த்தியாக வளர்க்கப் பட்டு வந்தது!

ஒருநாள் அந்த அரசன் பன்றிக் குட்டியை உலாவ அழைத்துச் செல்ல விரும்பியதால்



அழகிய வைரங்களால் இழைக்கப்பட்ட ஒரு பட்டை அதின் கழுத்தைச் சுற்றிப் போடப் பட்டது. அதன் உடம்பு பொன்னிற பட்டினாலாகிய சட்டையால் மூடப்பட்டது. இவ்வாறு அரசனும் பன்றிக் குட்டியும் உலாவப் புறப்பட்டனர். சிறிது தூரம்கழித்து ஒரு சேறு நிறைந்த குட்டை ஒன்றின் ஓரமாக அவர்கள் செல்லவேண்டியதாயிற்று. அக்குட்டை கறுஞ் சேறு நிறைந்ததும் துர்நாற்றம் வீசுவதுமாயிருந்தது. அந்தக் குட்டிப்பன்றி என்ன செய்தது என்று எண்ணுகிறீர்கள்? அது ஒரு பயமுமின்றி குட்டைக்கு ஓடி உள்ளே குதித்து சேற்றில் புரண்டு, புரண்டு விளையாடியது. அழகிய பொன்னிற பட்டு சட்டை கரி பூசினாற்போல் மாறி விட்டது.

விசனத்துடன் அரசன் தனது செல்ல பன்றிக்குட்டியை அரமனைக்கு அழைத்துச் சென்றான் உடனே வேலையாட்கள் மறுபடியும் அதைக் குளிப்பாட்டி வாசனை திரவியங்களை பூசி, அழகிய பட்டினாலாகிய ஊதா நிறச் சட்டையை அணிந்தனர். மறுபடியும் அரசனும் பன்றிக் குட்டியும் உலாவச் சென்றனர். அவர்கள் அரமனை வாசலைக் கடந்து வீதி வழியே சென்றபோது, மறுபடியும் ஒரு பயங்கரமான சேறுபடிந்த அசுத்தமான குட்டையைத் தாண்டி போக வேண்டியதாயிற்று. தனது செல்லப் பன்றிக்குட்டி என்ன செய்து விடுமோ என்று அரசன் பயந்து கொண்டிருந்தபோதே அந்த பன்றிக்குட்டி பாய்ந்து ஓடி சகதியில் புரண்டு தன் அழகிய சட்டையை மறுபடியும் அசுத்தமாக்கிக் கொண்டது. அது இவ்வாறு கிடந்து உழலுவதில் மிகவும் ஆசைக் கொண்டது. மறுபடியும் விசனத்துடன் பன்றிக் குட்டியை அரண்

மனைக்கு அழைத்துச் சென்றான். அரசர் இந்தத் தடவை அதைக் குளிப்பாட்டிய போது அதன் மார்பைக் கிழித்து பன்றியின் இருதயத்தை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக சாதுவான ஒரு ஆட்டுக் குட்டியின் இருதயத்தை வைத்து தைத்து விட்டனர். பிறகு அதற்கு சிவப்பான பட்டாடை உடுத்தி வாசனைத் திரவியங்களைப் பூசி அனுப்பினர்.

அரசனும் பன்றியும் அரண்மனை வாசலைத் தாண்டின உடனேயே ஒரு பெரிய பயங்கரமான சேற்றுள்ள குட்டை காணப்பட்டது. அரசன் பன்றிக்குட்டி என்ன செய்யுமோ என்று பயந்து நின்றான். இதற்கு முன் இரு சமயங்களிலும் சேற்றைக் கண்டவுடனேயே பன்றிக்குட்டி தனது குட்டையான தடித்த கால்களால் தாவிச்சென்றடைந்தது. ஆனால்



இப்போதோ அது அரசனது கால்களுக்கிடையே, பயத்தால் பதுங்கி நின்றது. அரசனைப்பற்றிய கவலை விட்டது. இனிமேல் அவாது அருமை பன்றிக் குட்டி சேற்றில் புரளாது. ஏன் தெரியுமா? அவனது பழைய குறும்புத் தனமான இருதயத்திற்குப் பதிலாக சாந்த குணமுள்ள சிறு ஆட்டுக் குட்டியின் இருதயமல்லவா வேலை செய்கிறது.

இக்கதை ஒரு சிறு வேடிக்கை கதை போல் காணப்பட்டாலும் இதில் ஒரு முக்கிய உண்மை அடங்கியிருக்கிறது. அதைக் கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.

——:o:——

## நன்றியுள்ள நாய்.

கெல்லோ என்ற பையனும் ஜிம்மி என்ற நாயும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் வீடு ஆண்வெர்ப் என்னும் பெரியநகரத்திற்கருகிலுள்ள ஒரு சிறு கிராமத்தில் இருந்தது. அது ஒரு குடிசைபோலக் காணப்பட்டாலும் மிகவும் சுத்தமாயும், ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருந்தது. அக்குடிசையைச் சுற்றியுள்ள சிறு தோட்டத்தில பீன்ஸ், பூசணி, பட்டாணி முதலிய கொடிகள் படர்ந்து கிடந்தன. இச்சிறு குடிசையில ஜெகன்தாஸ் என்ற ஒரு நொண்டி வயோதிபர் வசித்து வந்தார். அவர் 80 வயதடைந்த போது அவரது பெண் தன் மகனை இரண்டுவயது நிக்கலஸை விட்டுவிட்டு இவ்வுலகத்தினின்று மறைந்தாள். தாத்தாவும் நிக்கலஸுக்கு கெல்லோ என்று செல்லப் பெயரிட்டு அழைத்து வந்தார். ஜெகன்தாஸ் மிகவும் வயது சென்றவராயிருந்த போதிலும் கெல்லோவை அருமையாகக் கவனித்து வந்தார்.

ஜிம்மி என்பது ஆண்வர்ப் நகரிலுள்ள மஞ்சள் நிறமான ஒரு பராக்கிரமசாலியான நாய். அது ஒரு வயதுள்ளதாயிருந்த போது அலைந்து திரியும் வியாபாரியான மூட்டைக்காரனிடம் விற்கப்பட்டது. அவன் ஜிம்மியை மிகவும் கொடூரமாய் நடத்திவந்தான். வெண்கலத்தால் செய்யப்பட்ட குடங்களும் தோண்டிகளும் நிறைந்துள்ள கனமான வண்டியை ஜிம்மி தன்னால கூடியவரை வேகமாய் இழுத்துச்செல்லும். அந்தவியாபாரியோ சோம்பேறியாய் வண்டியின் பக்கமாக உல்லாசமாய் நடந்து வருவான். ஜிம்மி மிக்க வலிவுள்ளதாயிருந்த படியினாலேதான் தன் எஜமானரிடம் பட்ட அடிகளையும், உதைகளையும், பட்டினியையும், தாகத்தையும் சகித்துக்கொண்டு மேலும் மேலும் கஷ்டப்பட்டு உழைக்க ஏதுவாயிற்று.

வெயிற்காலத்தில் ஒரு நாள் வியாபாரி ஜிம்மியை ஆண்வர்ப்புக்கு செல்லும் ரஸ்தாவில் ஓட்டிச் சென்றான். அன்று வண்டியில் மிகவும் பளுவான பொருட்கள் இருந்தபடியினாலே ஜிம்மி மெதுவாக நகர்ந்தது. இதைக் கண்ட அதன் எஜமான், தனது சவுக்கினால் நாயின் முகத்தில் ஓர் அடி சுளீரென்று வைத்தான். அது அன்று முழுவதும் உணவாவது நீராவது அருந்தவில்லை. பசித் துன்பத்தோடு வழியில் தூசி கண்களை மூடியது. கால்



கள் தள்ளாடின. ஆகவே ஜிம்மி வழியில் ஒரு கல் தடுக்கி கீழே விழுந்து விட்டது. கீழே விழுந்தவுடனே அதற்கு அடியும் உதையும் பலமாக விழுந்தது. ஆயினும் அது பெலனற்று செத்த நாய்போல கிடந்தது. உடனே அந்த வியாபாரி ஜிம்மி இறந்து விட்டது என்றெண்ணி அதன் உடம்போடு பிணைக்கப்பட்டவைகளை அறுத்துவிட்டு நாயை ஒரு ஓரத்தில்



உதைத்து விட்டு தானே அந்த வண்டியை இழுத்துச் சென்றான்.

அதன் பின்பு அந்த சாலை வழியே அனேகர் நடந்து போன போதிலும் ஒருவராவது அந்த ஏழை நாயை கவனிக்கவுமில்லை. ஏறெடுத்து பார்க்கவுமில்லை. சிறிதுநேரங் கழித்து, ஒரு நொண்டியான வயோதிபர் அவ்வழியே வந்தார். அவருடைய ஆடை கிழிந்தும அழுக்கேறியும் காணப்பட்டது. அவர் அந்த நாயினருகே வந்தவுடன் கீழே குனிந்து அந்த நாயைப் பார்த்தார். அவர் தாம் ஜெகன்தாஸ் தாத்தா. அவரோடு வந்த கெல்லோவும் தனது சிரித்த முகத்துடன் ஜிம்மியைப் பார்த்தான். ஜெகன்தாஸ் தாத்தா கருணை நிறைந்தவராதலால அந்நாயை தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று அது பெலனடைந்து சுகமாகுமவரை அதை அன்போடு பராமரித்து வந்தார்.

அது நோயுற்றிருந்த காலத்திலும் இனிய பேச்சுக்களையும் அருமையான அணைப்பையுமே தவிர கொடிய வார்த்தைகளையும் அடியும், உதையும் பட்டதேயில்லை. இவ்வாறு அருமையாக நடத்தப்பட்டு வருவது ஜிம்மிக்கு பேரானந்தத்தைத் தந்தது. ஏனெனில இதற்குமுன் அது அடிபடாத நாளே கிடையாது. ஜிம்மி நல்ல சுகமடைந்தபின் கெல்லோ அதனுடனே அடிக்கடி விளையாட வருவான். பூக்களினாலே மாலைகட்டி ஜிம்மியின் கழுத்தில போட்டு ஆனந்தம கொள்ளுவான். இவ்வாறு ஜிம்மியும் கெல்லோவும ஒருவரையொருவர் மிகவும் அதிகமாக நேசித்து வந்தனர்.

ஜெகன்தாஸ் தாத்தா வீட்டில பசுக்கள் அதிகம். அவர் காலையில் அவற்றைக் கறந்து

பாலை பெரிய கலங்களில் ஊற்றி அக்கலங்களை ஒரு சிறு வண்டியில் வைத்து ஒருமைல் தூரத்திலுள்ள ஆண்வெர்ப் நகரத்திற்கு இழுத்துச் சென்று விற்றுவருவார். ஜெகன்தாஸ் தாத்தாவுக்கு நாள் பெலவீன மடைந்தபடியினால் அவரால் அந்த பளுவை இழுத்துச் செல்ல இயலவில்லை. ஜிம்மி சுகமடைந்தபின் ஒரு நாள் வெயிலில் படுத்துக்கொண்டு தாத்தா ஜெகன்தாஸ் அதிகாலையில் பாரமான வண்டியை இழுத்துச் செல்வதையும், மத்தியானம் வெயிலில் களைப்போடு வண்டியை இழுத்துக்கொண்டு வருவதையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தது. மறுநாள் காலையில் தாத்தா வண்டியினருகே வந்ததும் ஜிம்மி ஓடிப்போய் வண்டியின் முன் கட்டைகளைப் பற்களால் இழுத்து தன்னால் வண்டியை இழுக்கமுடியும் என்பதைக் காட்டியது. தாத்தா அதை அன்பாக அப்புறம் போகச்சொன்ன போதிலும் அது பிடிவாதமாக நிற்பதைக் கண்டு அதை கடிவாளத்தில் பூட்டி வார் கயிறுகளால் வண்டியோடு இணைத்தார். அன்று முதல் தினந்தோறும் ஜிம்மி பாற்குடங்களுள்ள வண்டியை இழுத்துச் சென்று வந்தது. குளிர் மிகுந்த நாட்களிலும் ஜிம்மி குளிரை பொருட்படுத்தாமல் தன் வேலையைச் செய்து வந்தது. முன்பெல்லாம் இழுத்து வந்த வெண்கல சாமான் வண்டியைப் பார்க்கிலும் இப்போது இழுத்துச் செல்லும் பாற்குடம் உள்ள வண்டி மிகவும் லேசாயிருந்தது. ஜிம்மி வீட்டிற்கு வந்தவுடனே தாத்தா அதன் முதுகைச் செல்லமாகத் தட்டிக்கொடுப்பார். அது மூன்றுமணிக்கு வேலை முடித்துவிடும். அதற்குப்பின் அது இஷ்டம்போல் விளையாடலாம், அல்லது தூங்கலாம். அது மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது.

சில வருஷங்களுக்குப் பின் ஜெகன்தாஸ் மிகவும் கிழப்பருவம் எய்தி விட்டதால் முன்போல வண்டியுடன் நடந்துகூடசெல்ல முடியவில்லை. அப்போதெல்லாம் ஆறு வயதுடைய நெல்லோ தன் தாத்தாவிற்கு பதிலாக செல்வான். அவன் வண்டியுடனேகூட நடந்து சென்று பாலைவிற்று பணம் பெற்று வருவான். அவனை யாவரும் விரும்பினர். அவனது இரு கரிய விழிகளும் பார்த்தவர்கள் அவனை விரும்பும்படியான அழகை அளித்தன. ஜனங்களெல்லாரும் நெல்லோவையும் அவனது நாயான ஜிம்மியையும் அதிகமாக விரும்பினர். அவர்களது வண்டி பச்சை வர்ணம் பூசப்பட்டிருந்தது.

காலைவேளையில் நெல்லோவும் ஜிம்மியும் புறப்படுகையில் தாத்தா ஜெகன்தாஸ் வெளியே உட்கார்ந்து கொண்டு அவர்கள் போவதை கவனித்துக் கொண்டேயிருப்பார். அவர்கள் மறைந்த உடனே தன்னிஷ்டம் போல சில சமயங்களில் தூங்குவார். சில சமயங்களில் ஜெபிப்பார். மாலை மூன்றுமணி அடித்தவுடனே தன் அருமை பேரனுடைய வரவிற்காகவும், நாயின் வரவிற்காகவும் ஆவலுடன் காத்திருப்பார். தாத்தாவைக் கண்டவுடன் ஜிம்மி ஆனந்த மிகுதியினால் குரைத்து வாலை ஆட்டும். அப்போது அதின் கழுத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மணிகள் இனிய ஓசையை உண்டாக்கும். பிறகு நெல்லோ அன்று நடந்த காரியங்களைச் சொல்லுவான். பிறகு அவர்கள் மூவரும் போஜனம் அருந்தி விட்டு தூங்கச் செல்வார்கள்

இவ்வாறு நாட்களும், வருஷங்களும் ஓடி மறைந்தன. தாத்தாவும், நெல்லோவும், ஜிம்மியும் ஒருவரை யொருவர் நேசித்து ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தனர்.

———:o:———

# விஞ்ஞானத் துணுக்குகள்.

## தேள் கொட்டுக்கு மருந்து.

தேள் கொட்டுக்கு அநேக மருந்துகள் சொல்லப் படுகின்றன. அவைகளில் பின் வருபவை சில.

உடைந்து போன கிராமபோன் பிளேட்டுகள் தேள்கடிக்கு சமய சஞ்சீவிகளாக விளங்குகின்றன. யாரையாவது தேள் கொட்டிவிட்டால், ஒரு துண்டு உடைந்த கிராமபோன் பிளேட்டை எடுத்து ஒரு மருந்து உரைக்கும் கல்லின்மேல் ஒரு துளி தண்ணீர்விட்டு அதன் மேல் நன்றாக உரசவேண்டும். கொஞ்சம் பசைபோல் உண்டாகியவுடன் அதை எடுத்து



தேள் கொட்டிய இடத்தில் போட்டால் சில நிமிஷங்களுக்குள் வேதனை நீங்கும்.

மற்றொரு முறை யாதெனில் கொஞ்சம் தேயிலையை வாயில்போட்டு உமிழ் நீருடன் நன்றாகக் கலந்து வாயிலேயே சிறிது நேரம் வைத்திருக்க வேண்டும். தேயிலை நன்றாய் ஊறியபின், அதை எடுத்து தேள் கொட்டிய இடத்தில் போட்டால் சில நிமிஷங்களுக்குள் வேதனை நீங்கும்.

ஒரு வெங்காயத்தை நன்றாக நசுக்கி எலுமிச்சம் பழச் சாறுடன் கலந்து, கொட்டின இடத்தில் போட்டால் வெகு சீக்கிரத்தில் கொடிய வேதனையும் நீங்கும்.

அல்லது பொட்டாசியம் பெர்மாங்கனேட் துண்டு ஒன்றை தண்ணீரில் நனைத்து கொட்டிய இடத்தில் வைத்தால், அது அவ்விடத்தை எரித்து வேதனையை நீக்கும்.

ஒரு சுத்தமான துணியை காடியில் நனைத்து அவ்விடத்தில் வைத்தாலும் வேதனை உடனே நீங்கக் கூடும்.

## மஞ்சள் ஜுரம்

மஞ்சள் ஜுரம் என்பது ஒரு கொடியவகை ஜுரம். இப்பெயரைக் கேட்டதுமே யாவருக்கும் பயம் ஏற்படும். இவ்வகை ஜுரத்தினால் அதிகமாக பாதிக்கப்படும் இடங்கள் யாதெனில் ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் காலனிகளும், தென் அமெரிக்க குடியரசு நாடுகளுமே. இக்கொடிய ஜுரம் கொசுக்களின் மூலமாகவே மனிதனுக்குப் பரவுகிறது என்பதை அதிகாரிகள் முன்னரே அறிந்திருந்த போதிலும் 1927ஆம வருஷம் வரை இவ்வியாதியின் காரணம் அறியப்படாமலிருந்தது. 1930ஆம் ஆண்டில்தான் இக்கொடிய வியாதியைத் தடுப்பதற்கு ஒரு மருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இம்மருந்து 1930ல் கண்டு பிடித்திருக்கப்படாவிட்டால், தற்சமயம் சர்வ தேசங்களுக்கும் அநுகூலமாக ஏற்பட்டிருக்கும் விமான போக்கு வரத்துக்கள் இவ்வாறு ஏற்படுத்தியிருக்க முடியாது. மேற்கு ஆப்ரிக்காவில் யுத்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பெரிய விமான நிலையங்கள் உண்டாகியிரா.

இக்கொடிய ஜுரத்தினால் ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான உயிர்கள் நஷ்டப்பட்டதால் தான் மேற்கு ஆப்பிரிக்காவுக்கு வெள்ளைக்காரரின் கல்லறைத் தோட்டம் எனப் பெயர் வந்தது. 1927ம் வருஷத்தின் மத்தியில்தான் இவ்வியாதிக்கு மருந்து கண்டு பிடிப்பதற்காக இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட ஒரு மனிதனின் இரத்தத்தைக்கொண்டு சோதித்தார்கள் இச்சோதனையை செய்த புரொபஸர் ஸ்டோக்ஸ் என்பவர் இவ்வியாதியினால் பீடிக்கப்பட்டுத் தன் உயிரை இழக்க நேரிட்டப் போதிலும் இவ்வியாதிக்குத் தகுந்த தற்காப்பு மருந்து கண்டு பிடிப்பதற்கு இவர்தான் காரணமாக இருந்தார். இன்னும் அநேக பெரிய வைத்தியர்களும் இச்சோதனைகளில் ஈடுபட்டு தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து மற்ற மனிதருக்குப் பிரயோஜனமான மருந்தைக் கண்டு பிடித்தனர். தற்சமயம் இக்கொடிய வியாதி பரவுவதற்கு இடம் இல்லை. ஏனெனில் அதை வெகு சுலபமாக வாராதபடி தடுப்பதற்குத் தக்க மருந்து கண்டு பிடித்ததினாலேயே.

## மூங்கில் பூ

மூங்கில் மரங்கள் ஐம்பது வருஷங்களுக்கு ஒரு முறைதான் பூக்கின்றன.

## மின்சார மோட்டார்கள்

மின்சார மோட்டார் வண்டிகள் அதிக பாரத்தை ஏற்றிக்கொண்டு வேகமாகச் செல்ல முடியாதாகையால் அவைகள் அதிகமாக உபயோகப் படுத்தப் படுவதில்லை. அநேக வருஷங்கள் இதைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்ததின் பயனாக கிரேட் பிரிட்டனிலுள்ள மோட்டார் செய்பவர்கள் கண்டு பிடித்திருப்பது யாதெனில் மாக்னீஷியத்தைக் கொண்டு இலேசான ப்ளேடுகள் செய்வதனால் மின்சார மோட்டார் வண்டிகள் அதிக பாரத்தை ஏற்றிக்கொண்டு மணிக்கு 50 மைல் வேகத்தில் செல்லக்கூடும் என்பதே.

# தாத்தா பிரயாணம்.

பசு:—தாத்தா, தாத்தா எங்கே போகிறீர்?

தாத்தா:—காசிக்குப் போகிறேன்.

பசு:—நானும் வரட்டா?

தாத்தா:—வேண்டாம். பிரயாணம் வெகு தூரம். உன்னால் நடக்க முடியாது.

பசு:—நான் நன்றாய் நடப்பேன்.

பசு:—எனக்கும் செருப்பு போட்டுக் கொள்ளத் தெரியாதா?

தாத்தா:—ஹ—ஹா, ஹ—ஹா, மாடு செருப்புப் போட்டுக் கொள்ளப் போகிறதாமே—ஹி—ஹி—ஹி.

பசு:—என்னைப் பார்த்து சிரிக்கும் கிழவா, இதோ புத்தி கற்பிக்கிறேன் பார்.



தாத்தா:—மகா கஷ்டமான பிரயாணம். அங்கே முள்ளுண்டு, கல்லுண்டு, நீ என்ன செய்வாய்?

பசு:—நீர் மாத்திரம் எப்படி நடப்பீர்?

தாத்தா:—நான் செருப்பு போட்டுக் கொள்ளுவேன்.

(மாடு முட்ட வருகிறது. தாத்தா பயந்து ஓடுகிறார்.)

பசு:—ஹ—ஹா, ஹ—ஹா, ஹ—ஹா, தாத்தா, தாத்தா, பழந்தாத்தா, காசிக்குப் போகும் பழந்தாத்தா, மாட்டைக்கண்டு ஓடும் பழந்தாத்தா—ஹி—ஹி—ஹி.

——:o:——

# சிரிப்பாயோ! தடிப்பாயோ!

ராமு:—கோபால், இன்று என்ன கிழமை?

கோபால்:—பொறு, நேற்று என்ன கிழமை என்று சொல்லு நான் உடனே சொல்கிறேன்.

---

முதல் பைத்தியக்காரன்:—என் தம்படி ஆயிரம் ரூபாய்க்கு சமானம்.

இரண்டாம் பைத்தியக்காரன்:—அப்படியா என்னுடைய ஒரு நிமிஷம் ஆயிரம் வருஷங்களுக்கு சமானம்.

முதல் பைத்தியக்காரன்:—சரி, எனக்கு ஒரு தம்பிடி கொடு.

இரண்டாம் பைத்தியக்காரன்:—தயவு செய்து ஒரு நிமிஷம் பொறுத்துக்கொள் தருகிறேன்.

---

உபாத்தியாயர்:—கடவுளால் செய்யக் கூடாத காரியம் எதுவும் உண்டோ?

பையன்:—ஆம் ஐயா.

உபாத்தியாயர்:—அது என்ன?

பையன்:—கடவுளால் பொய் சொல்ல முடியாது.

---

ஒரு கூட்டத்தில் அதிக நேரம் வீண் வம்பு அளந்து கொண்டிருந்த வாலிபன் ஒருவன் "எனக்கு அலப்புவர்கள் என்றால் கொஞ்சமும் பிடிக்காது" என்றான்.

ஒரு நண்பன் "ஆனால் உமது தாய்க்கும் தகப்பனுக்கும் அதிகம் பிடிக்கும் போல் தோன்றுகிறது" என்றார்.

---



# செய்தித் திரட்டு

இந்தியாவின் அயல் நாட்டு மந்திரியாக இருந்தவரும், காபினெட் மந்திரியினர் இந்திய விஜயம் செய்த போது இந்தியாவிற்கு வந்து இந்திய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மிகவும் முயன்றவருமான பெதிவிக் லாரன்ஸ் சீமான் தம் பதவியை ராஜினாமா செய்தார். அவ் வேலையை தற்போது லிஸ்ட்வெல் பிரபு ஏற்றுக் கொண்டனர்.

---

இந்தியாவிலிருந்து டேவிஸ் கப்டென்னிஸ் பந்தயத்திற்காக ஓர் கோஷ்டி இங்கிலாந்து சென்றுள்ளது. இந்தியாவில் பல ஆண்டுகளாக முதன்மை ஸ்தானம் வகித்த கௌஸ் மகம்மது இந்த கோஷ்டியினருக்கு தலைவராக ஏற்படுத்தப்பட்டார். இவர்கள் இங்கிலாந்தில் பல இடங்களில் விளையாடி வெற்றி பெற்றனர்.

---

டென்மார்க்கின் அரசராகிய கிறிஸ்தியன் என்பவர் தமது எழுபத்தாறாவது வயதில் இறந்துபோனார். அவருடைய தம்பியாகிய பிரேடரிக் இளவரசர் சிம்மாஸனம் ஏறினார்.

---

பலஸ்தீன பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நியுயார்க்கில் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் ஓர் கூட்டமொன்று கூடியுள்ளது.

பலஸ்தீன பிரச்சினையை கூடிய விரைவில் தீர்க்க வேண்டுமென்று யூதர்களிடமிருந்து ஐக்கிய நாட்டு ஸ்தானத்திற்கு ஓர் கோரிக்கை



வந்துள்ளது. அரேபியர் தமக்கு சுதந்திரம் வேண்டுமென்று ஓர் கோரிக்கை விடுத்துள்ளனர். சிரியா நாட்டிலிருந்து வந்திருக்கும் கோஷ்டியினர் விடுத்த அறிக்கையில்—பலஸ்தீன பிரச்சினை முடிவுக்கு வராவிடில் அது உலக சமாதானத்திற்கே முட்டுகட்டையாக இருக்குமென்று கூறியுள்ளனர். ஆகவே நியு யார்க்கில் கூடியுள்ள ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் பலஸ்தீன பிரச்சினையைக் குறித்து யாதவது ஒரு முடிவுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

மாஸ்கோவில் நடைபெற்ற அயல்நாட்டு மந்திரிகளின் மகாநாடு முடிவடைந்தது. வல்லரசுகட்கிடையே அனேக கருத்து வேறுபாடுகள் ஏற்பட்ட போதிலும் ஜெர்மனியைக் குறித்து மற்ற நாடுகளுக்கு இருக்கும் எண்ணம் தெளிவாயிற்று. ஜெர்மனியை மற்ற நாடுகளுக்கு பொருள் திரட்டுவதற்காக வேண்டிய ஒரு பிரதேசமாக கருதாமல் அதை பொருளாதார, அரசிய துறைகளில் முன்னேற்றுவதற்காக சலுகைகள் அமைத்துக் கொடுத்து அதை சிறந்ததொரு நிலைக்கு கொண்டுவரவேண்டுமென்று அமெரிக்க அயல் நாட்டு மந்திரியாகிய ஜெனரல் மார்ஷல் கூறினார்.

ஜெர்மனியின் அரசாங்க முறையைப்பற்றிய ஓர் முடிவுக்கு வராததின் காரணம் வல்லரசுகட்கிடையே உள்ள கருத்து வேறுபாடேயாகும்.

---

மேன்மை தங்கிய மன்னர்பிரான் தம்பதிகள் ஆப்பிரிக்கா விஜயம் முடிந்து இங்கிலாந்து திரும்பினார்கள். ஆப்பிரிக்கா மக்களிடையே இதுவரை இருந்ததைவிட ஆங்கில கட்டு தற்போது பன்மடங்கு அதிகரித்தது. ஆப்பிரிக்க மக்கள் மன்னர்பிரான் தம்பதிகளுக்கு சிறந்ததொரு வரவேற்பளித்தனர்.

---

இந்திய சுதந்திரத்திற்காக வேண்டிய பல ஏற்பாடுகள், பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது நமது புதிய வைஸ்ராய் பிரபு மவுண்ட்பேட்டன் பல கட்சித் தலைவர்களைச் சந்தித்து இந்தியாவின் சிக்கலான பிரச்சினையை ஓர் முடிவுக்குக் கொண்டுவர உழைத்து வருகிறார். டெல்லி ஐக்கிய நிர்ணய சபையில் சுதந்திர இந்தியாவிற்கு வேண்டிய பல திட்டங்களைத் தீட்டிவருகின்றனர். கட்சி மத வேறுபாட்டினால் உண்டான குழப்பங்கள் அதிகமாக இருக்கும் இடங்களான பெஷாவார், ராவல்பிண்டி முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றனர் ஜூன் மாதத்திற்குள் இந்திய சுதந்திரத்திற்கு பிறகு இந்தியாவில் இருக்கவேண்டிய அரசாட்சிமுறை சிலவற்றை வைஸ்ராய் பிரபு தயாரித்துள்ளார். அத்திட்டங்களை மன்னர்பிரான் அரசாங்கம் ஆலோசித்து ஒப்புக்கொள்வதற்காக தம்முடைய காரியதரிசியாகிய இஸ்மே பிரபுவை வைஸ்ராய் இங்கிலாந்து அனுப்பியுள்ளார். சேனாதிபதியாகிய ஆசினலேக்கும் இந்தியாவின் உண்மை நிலையை எடுத்துக்கூற இங்கிலாந்து சென்றுள்ளார்.

---

மதராஸ் மந்திரிசபையின் தலைவராகிய ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மந்திரிசபை தற்கங்களில் தமிழில் விடையளித்தார். தாய்மொழியை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அனைவரும் கற்றறிய வேண்டுமென்ற கொள்கைக்கு தாமே முன்மாதிரியாக இருக்கிறார் போலும்.

---

தென்னிந்தியாவின் பிரசித்தபெற்ற நடிகரும் பாடகர்களுமான ம. கே. தியாகராஜ பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் விடுதலை அடைந்தனர். இவர்களுடைய விடுதலைகளைப்பற்றி அனேகருக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணிற்று.

---

## மிருகத்தின் வீரச்செயல்

ஒரு நாள் இரவு இருட்டினபிறகு பாலு மிக்க விசனத்துடன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ கஷ்டப்பட்டு முயன்றும் அவனுக்கு ஆஸ்துமா வியாதியிருந்தபடியினால் அவனால் சித்தி பெற முடியவில்லை. அது அவனுக்கு மிக்க விசனத்தைக் கொடுத்தது. இவ்வாறு நடந்து செல்கையில் எங்கிருந்தோ ஒரு நாய் ஊளையிடுவதைப் போன்ற சப்தம் கேட்டது. அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தபோது ஒரு புதருக்கருகில் ஒரு சிறு நாய்க்குட்டி கிடப்பதைப் பார்த்தான். உடனே அதைத் தூக்கி எடுத்து குளிரினால் நனைந்திருந்த அதனுடைய உடம்பை அனல்படுத்துவதற்காக அதனை தன் மேல் சட்டைக்குள் அணைத்துக்கொண்டான். அதற்கு 'ரோஸ்' என்று பெயரிட்டு தன் வீட்டில் கொண்டுபோய் வளர்த்து வந்தான். நாட்கள் செல்லச் செல்ல ரோஸ் தனது எஜமானாகிய பாலுவினிடம் மிகவும் அன்பு காட்ட ஆரம்பித்தது. பாலு பள்ளிக்கூடத்திற்குச் செல்கையில் ரோஸும் கூடவே செல்லும். அவனது பள்ளிப் பிள்ளைகள் செய்யும் பரிகாசத்தை அவன் சிறிதும் சட்டைசெய்யவில்லை.

சில நாட்களுக்குப் பின் பாலு தன் நண்பர்களுடன் தன் வீட்டிற்கு 15 மைல் தூரத்திலுள்ள ஓரிடத்திற்குச் சென்று சில நாட்களை உல்லாசமாய்க் கழித்து வர எண்ணி புறப்பட்டான். வழக்கம் போல ரோஸும் பின் சென்றது. அவர்கள் ஒரு சிறு ஓடைக்கு அருகிலுள்ள புல் தரையில் கூடாரம் அடித்துத் தங்கினர். பாலுவின் சிநேகிதர்களெல்லாரும் ஆற்றில் உல்லாசமாய் நீந்த ஆரம்பித்தனர்.



ஆனால், பாவம் பாலு மாத்திரம் நீந்த இயலவில்லை. மனதில் ஆசைப்பட்டும் என்ன பிரயோஜனம்? ஒருதரம் வெகுபிரயாசையுடன் நீந்த முயன்ற போது தொண்டைக்குள் ஜலம் வந்துவிட்டதால் அவன் அதற்குப் பின் நீந்தவே செலலவில்லை.

ஒரு நாள் ஒரு வயோதியர் வெகு தூரம் நடந்து வந்த களைப்பினால சிறு பையன்கள் தங்கியிருந்த இடத்தில் வந்து இளைப்பாறினார். உடனே அச்சிறுவர்கள் அந்த தாத்தாவுக்கு வேண்டிய உணவையும், படுக்க வசதியையும் செய்து கொடுத்தனர். அவர்கள் தம்மை அன்பாக உபசரித்ததை கண்ட தாத்தா தன்னிடத்திலுள்ள ஒரு பழைய படகை அவர்களுக்கு பரிசாக அளித்து விட்டுச் சென்றார். அவர் கொடுத்துச்சென்ற படகில் ஏறிக்கொண்டு பையன்கள் உல்லாசப் பிரயாணம் துவக்கினர். பாலுவும் பையன்களோடு சேர்ந்து படகில் ஏறிக்கொண்டான். ரோஸ் மாத்திரம் கரையில் நின்றுக் கொண்டு இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அன்று சாயந்தரம் மறுபடியும் பையன்களெல்லாரும் படகில் ஏறிச்செல்கையில் திடீரென்று வானம் இருண்டு ஒரு கோரமான புயல் வீசத்துவங்கியது. உடனே படகு அங்கு மிங்குமாக ஓடி அலைந்தது. கடைசியில் அது சிறிது சிறிதாக மூழ்க ஆரம்பித்தது. பாலுவைத்தவிர மற்றவர்களுக்கெல்லாம் பயமில்லை. ஏனெனில் அவர்களெல்லாரும் நீந்துவதில் வல்லவர்கள். ஆனால் ஏழை பாலு என்னசெய்வான்? புயல் மிகவும் வேகமாய் அடித்தபடியினால் சிறுவர் யாவரும் தம் தம் உயிரைக் காப்பாற்றுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனரே யன்றி அவர்களில் ஒருவனுகிலும் பாலுவைப்பற்றி எண்ணவேயில்லை. ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டு நீந்தி கரையேறினர். கரையில் வந்த ஒவ்வொருவரையும் ரோஸ் மோப்பத்தால மோந்து தன் எஜமானர் இன்னும் வரவில்லை என்று அறிந்தது. சிறிது நேரம் பொறுமையாய் காத்திருந்த ரோஸ் மெதுவாக ஊளையிட ஆரம்பித்தது. பையன்களும் இனி பாலுவைக் காண்போம் என்ற நம்பிக்கையை இழந்தனர்.

பிறகு நீந்துவதில் கைதேர்ந்த இரு சிறுவர் பாலுவைத் தேடுவதற்காக நீரில் மூழ்கினர். அவர்களின் நடுவே ரோஸும் குதித்து நீரினுள் மறைந்தது.

சிறிது நேரம் கழித்து ரோஸ் பாலுவை இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தது. பாலு மூர்ச்சையுற்று செயலற்றுக் கிடந்தான். உடனே மற்றபையன்கள் பாலுவைச் சுற்றி நின்றுகொண்டு அவனுக்கு மூச்சு திரும்பி வருவதற்கான முறைகளை செய்தனர். பிறகு அவனைக் கூடாரத்தினுள் கிடத்தி கம்பளி போர்வைகளால் மூடினார்கள். இச்சமயத்தில் பாலுவின் உயிரைக் காப்பாற்றிய ரோஸை அவர்கள் மறந்துவிட்டார்களென்றே சொல்ல வேண்டும்.

ஆனால் பாலு கண் விழித்தவுடன் கேட்ட கேள்வி "என் அருமை ரோஸ் குட்டி எங்கே?" என்பதுதான். தன்னை பெயரிட்டழைப்பதைக் கேட்டு படுக்கையினருகே வந்து வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. சில நாட்களுக்குப் பின் பாலு பூரண குணமடைந்தான்.

அதன் பின் பாலுவும், ரோஸும் மிகவும் அன்பாய் ஒருவரை ஒருவர் நேசித்து சுகமாய் வாழ்ந்து வந்தனர்.

# பரிசுத்த மாற்கு

பல்லாயிரம் ஆண்டுகளாக யூதர்கள் பஸ்கா பண்டிகை போன்ற பண்டிகைகளை கொண்டாடி வருகிறார்கள். ஆண்டவர் எகிப்து தேசத்திலுள்ள அடிமைதனத்திலிருந்து தங்களை விடுதலையாக்கினபடியினால் அதை வருஷா வருஷம் நினைவு கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே பஸ்காவாகும். ஒவ்வொரு இறுதியிலும் ஒவ்வொரு குடும்பவும் விசேஷித்த விதமான உணவை உண்டு பண்டிகையை ஆசரித்து வருவது வழக்கம். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் ஒரு வியாழக்கிழமை இரவு ஒரு போதகர் தமது சீஷாகளோடு இராப்போஜனம் அருந்துவதற்காக எருசலேமிலுள்ள ஒரு மேல் அறையில் அமர்ந்தார். அவ்வீடு அவருக்கு ஒரு பக்தியுள்ள ஸ்திரியினால் கொடுக்கப்பட்டது. அந்த ஸ்திரியின் பெயர் மரியாள். அவளே பரிசுத்த மாற்குவின் தாயார்.

மிகுந்த தரித்திரமும் அல்லது மிகுந்த செல்வாக்கும் இல்லாத சாதாரண மக்களுடைய வீட்டுவாயிலைக் காப்பதற்கு ஒரு இளம் பெண்ணாவது பையனாவது உண்டு. அவர்கள் இராப்போஜனம் உண்ண கூடியிருந்த அன்று இரவிலே மரியாளின் மகனான மாற்குவுக்கு வாயிற்காப்போனின் வேலைகிடைத்தது அது கௌரவமான வேலையில்லாத போதிலும் அதை அவர் மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்.

மாற்கு போஜனம் முடிவதற்குள் பலமுறை தூங்கி யெழுந்துவிட்டார். ஏனெனில் அந்த போதகர் தமது சீஷருக்கு பலபோதனைகளைச் செய்துகொண்டிருந்தபடியால் போஜனம் சீக்கிரத்தில் முடிவடையவில்லை. சாப்பாடுமுடிந்தவுடனே அவர்களெல்லாரும் ஜெபத்தில் தரித்திருப்பதற்காக ஒரு மலையினடிவாரத்திலுள்ள ஒரு தோட்டத்திற்குச் சென்றனர். போதகரை சிறைப்படுத்தி கொலைசெய்யவேண்டுமென்ற அவா கொண்டுள்ள ஜனத்தின் மூப்பர்கள் பொழுது விடியும் சமயத்தில் திரளான ஜனங்களை பட்டயத்தோடும் தடிகளோடும் அனுப்பினர். அந்த ஜனக்கூட்டம் முதலில் மேல் வீட்டறைக்கு வந்து அங்கே போதகரை காணாமல் அவரது சீஷர்களில் ஒருவனது ஒத்தாசையினால் தோட்டத்தை வந்தடைந்தனர்.

அப்போதுதான் மாற்கு தனது தூக்கத்திலிருந்து எழும்பி ஜனக்கூட்டத்தையும் பந்தங்களையும் கண்டு தனது போதகருக்கு என்ன சம்பவிக்குமோ என்ற பயத்துடன் நின்று கொண்டிருந்தான். ஆகவே அவன் ஜனக்கூட்டத்திற்கு முன்னே அத்தோட்டத்தை அடைந்து போதகருக்கு நேரிடப்போகிற ஆபத்தைக் குறித்து அவரிடம் கூறினன்..

போர்ச். சேவகர்கள் தோட்டத்திற் வந்து உடனே இயேசுவை விலங்கிட்ட உடனே அவரது சீஷர்கள் அவரை தனிய கைவிட்டு விட்டு ஓடிவிட்டனர். ஆனல் மாற் போதகருக்கு என்ன நடக்குமோ என்ப அறிவதற்காக போர்ச் சேவகர்களைப் பி தொடர்ந்தார். போர்ச் சேவகர்கள் அவனை சேர்த்து சிறையிலடைக்க யத்தனித்தபோ அவன் தனது துண்டை விட்டு விட்டு நி வாணமாய் ஓடிப்போனன்.

போதகர் நியாயம் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். 3ம் நாள் அவர் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் சிறையாகப் பிடிக்கப்பட்டபோது பயத்தினால் ஓடி ஒளித்துக்கொண்ட அவரது சீஷர்கள் அவரது உயிர்த்தெழுதலின் மூலமாய் புதுபெலனடைந்து அவரை மகிழ்ச்சியுடன் ஏற்க்கொண்டனர் ஆகவே அவர்களெல்லாரும் ஜெபிப்பதற்காக அதேமேல் வீட்டறையில் கூடினர். அவர்கள் எல்லாவிடங்களிலும் சுற்றித்திரிந்து மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசிங்கிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டனர்.

சீஷர்களுக்குள் பிரதானமானவன் செம்படவனான பேதுருவே. அவன் தனது போதகரைப்பற்றி மக்களுக்கு போதித்ததினிமித்தம் சிறையிலடைக்கப்பட்டார். பேதுரு ஆச்சரியவிதமாய் கர்த்தருடைய தூதனால் சிறையினின்று தப்பிய பிறகு சென்றடைந்த அறையும் மாற்குவின் வீட்டிலுள்ள மேல் அறையே. இயேசுவைக் கண்ணால் கண்டிருப்பதாலும், பேதுருவின் போதனைகளாலும் மாற்குவும் இயேசுவின் சீஷர்களில் ஒருவனை சேர்ந்துக் கொண்டான். அவனது தாயின் சகோதர



னான பர்னபாவும் இவனைப் பின்பற்றி கிறிஸ்துவின் தொண்டனானான் சில ஆண்டுகளுக்குபின் முதலில் சவுலாக இருந்து பின்பு பவுலாக மாறினவரும் கிறிஸ்துவைப் பின்பற்றினர்.

மற்ற சீஷர்கள் பவுலை முதலில் நம்பாமற் போனபோதிலும் பர்னபா அவனைச் சேர்த்துக்கொண்டு மற்ற சீஷர்களையும் அவனிடம் அன்பாக இருக்கும்படி ஏவினன். அதுமுதல் பர்னபாவும், பவுலும் நெருங்கிய நண்பர்களாகவும் உடன் கூட்டாளிகளாயும் உழைத்து வந்தனர்.

சில வருஷங்கள் கழித்து மாற்குவின் மகனான பர்னபாவும், பவுலும் ஏழைகளின் குறைகளை நிவிர்த்திப்பதற்காக பணம் திரட்டிக்கொண்டு எருசலேம் வந்து சேர்ந்தனர். அவர்கள் மாற்குவின் வீட்டில் தங்கியிருந்தபடியினாலே மாற்கு அவர்களுக்கு சிறந்த நண்பனாகிவிட்டான். ஏழைகளுக்கு உதவி செய்வதில் பர்னபா அவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தனர்.

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிற்கு சென்றபோது மாற்கு தங்களுக்கு அதிக உதவியாயிருப்பான் என்று எண்ணி அவனை கூட்டிக் கொண்டு போக எண்ணினர். மாற்கும் இவ்வாறு பவுல், பர்னபா, என்பவர்களுடன் கப்பலேறி ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளுக்கும் சென்றார். அவர்கள் முதலில் பர்னபாவின் பிறப்பிடமான சிப்புரு தீவிற்கு சென்றனர், பவுலும் பர்னபாவும் பின்னும் பிரயாணத்தைத்தொடர்ந்துநடத்தமுயன்றனர். ஆனல் மாற்குவோ அவர்களோடு போக மறுத்தான். ஆகவே பவுல் மறுபடியும் மாற்குவை சேர்த்துக்கொள்ள மறுத்தான். ஆனல் அவனது உறவினனான பர்னபாவோ அவனிடம் சற்று இரக்கம் காட்டினன் இவ்வாறு மாற்கு இரு சிநேகிதர்களுக்குள் பிளவைஉண்டாக்கி வந்தான் ஆயினும் அவன் பவுலினது எதிரியாக மாறிவிடவில்லை. பவுல் ரோமாபுரியிலே சிறையிலடைக்கப்பட்ட முதல் இரு சமயங்களிலும் மாற்கு அவரோடே இருந்தான். பவுலும், மாற்கு ஒரு சிறந்த கூட்டாளிதான் என்று தமது நிருபங்களில் பிரஸ்தாபித்துள்ளார்.

பேதுரு கிரேக்க பாஷையில் சற்றும் தேர்ச்சிபெறாதவனானதால் பேதுருவின் பிரசங்கங்களை படித்த வாலிபனான மாற்கு கிரேக்க பாஷையில் திருப்பி சொல்வது வழக்கம். பேதுரு எழுதப் படிக்க தெரியாதவராதலால் அவர் சொல்லச் சொல்ல மாற்கு கிரேக்க மொழியில் எழுதினர்.

மாற்கு தமது குருக்களுக்கு சிறந்த சீஷராக விளங்கினர். அவர் தமது போதகர்களுக்கு பணிவிடை செய்தது மாத்திரமல்லாது அவர்களது ஜீவிய சரித்திரத்தையும் எழுதினர். மாற்கு தமது போதகர்களுக்கெல்லாம் போதகராய் விளங்கிய இயேசு கிறிஸ்துவின் சரித்திரத்தையும் பேதுருவின் உதவியைக் கொண்டு எழுதி முடித்தார்.

—— :o: ——

# அவரூபியான அரசக் குமாரி

முன்னொரு காலத்தில் சந்திரராஜன் எனப்பட்ட ஒரு அரசன் இருந்தான் அவனுக்கு மல்லிகா என்ற ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு சகல காரியங்களும் குறைவின்றி இருந்த போதிலும் சௌந்தரியம் என்னும் ஒரே காரியம்தான் இல்லை. அவளிடம் கருணை, அன்பு முதலிய நற்குணங்கள் விளங்கின. அவள் மங்கை பருவம் எய்தியிருக்கும் நாளில் அவளுக்கு மேனியழகு இல்லாதகினலே அவளுக்கு சரியான வரன் அகப்படவில்லை. எந்த சிற்றரசரும் அவளை மணக்க முன்வரவில்லை. ஆகவே அவளது பெற்றோர் அவளது நிலைமையைக் குறித்து விசனமாயிருந்தனர். அவர்கள் பெரிய அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்த போதிலும் அவர்களது மகளுக்கு அழகில்லாத குறையால் ஒருவரும் அவர்களின் செல்வத்தை ஒருபொருட்டாக மதிக்கவில்லை.

இராஜக்குமாரி எப்போதும் அமைதலை விரும்பியவராதலால் நகருக்கு சற்று அப்

பால் அவளுக்கென்று ஒரு நந்தவனம் நிர்மாணிக்கப்பட்டது. அவள் சந்தடியின்றி நிம்மதியாக இருக்க விரும்பும் நேரங்களில் அங்கு சென்று அங்கு கட்டப்பட்டுள்ள சிறுவீட்டில் இளைப்பாறுவாள். ஒருநாள் அவ்விடத்திற்கு ஒருபிரயாணி வந்து இளைப்பாறுவதற்கு இடம் கேட்கவே இளகிய மனத்தினளாகிய மல்லிகாவும் அவன் தங்குவதற்கேற்ற வசதிகள் செய்தாள்.

அங்கு வந்தது உண்மையில் ஒரு அரசக்குமாரனே. தனது தாய் தந்தையரின் ஆடம்பர வாழ்க்கை அவனுக்கு வெறுப்பைத் தருவதாயிற்று ஆகவே அவர் எவ்விடத்தில் தன் மனதிற்கு சமாதானம் கிடைக்குமோ என்று எண்ணி ஏங்கி அலைந்துத் திரிகையில்தான் இராஜக்குமாரியின் வீட்டிலுள் தங்க நேர்ந்தது. இளவரசியோ இவனது உண்மை வரலாற்றை அறியாதிருந்தாள். புதியதாக வந்த அரசக்குமாரன் இளவரசியின் சிறு வீட்டிலும் அதை சுற்றியுள்ள தோட்டத்திலும் மிகவும் விருப்பங்கொண்டான். இளவரசி யாவரிடமும் அன்பாக நடந்து கொள்வதைக்கண்டு அவளிடம் அன்பு கொண்டான். அவளது அடக்கமான நடத்தையும் இனிய பேச்சுகளும் அவனுக்கு இன்பத்தை மூட்டின.

ஆகவே அவன் மல்லிகாவையே மணம் செய்து கொள்வதாக மனதில் உறுதி செய்து தன் பெற்றோருக்குத் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். மல்லிகாவும் தங்கள் அந்தஸ்திற்குச் சமமான அந்தஸ்தை படைத்தவள்தான் என்பதைக் கேள்வியுற்ற இளவரசனின் பெற்றோர் தமது புதல்வனது மனத்திற் கிசைந்தனர். மேலும் தமது புதல்வன் யாவற்றையும் தீர ஆலோசித்துத்தான் செய்வான் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது

ஆகவே அவ்விளவரசனுக்கும் மல்லிகாவிற்கும் சிறப்பாக திருமணம் நடந்தது. பெண்ணைப் பெற்றவர்களின் கவலையும் நீங்கியது.

—:o:—

## ஆந்தையும் அன்புள்ள பையனும்



1 ஆந்தை கருத்துள்ள ஆந்தை மாமா
ஆசைதீர உனக் கென்ன வேண்டும்
அகிலமெங்கும் ஞானியெனப் புகழும்
அண்ணலே உந்தன் ஆசை எதுவோ.

2 கள்ளமற்ற செல்லப் பிள்ளாய் நீ
உள்ளத்தின் ஆசை அறிவாயோ—
கதிரவன் மறையவும் பகல்வேளை தொலையும்
அந்நேரம் நிலைப்பதுவாம்.

3 ஐயையோ மாமா, அதுவேண்டாம்
ஏழைப்பையன் எங்ஙனம் ஆடிடுவேன்
பகல்வேளை நீடித்து பாலன் ஆட
பரமனை என்றும் வேண்டிடுவேன்,



## கிளமெண்டினா பட்லர்.

கிளமெண்டினா பட்லர் என்னும் இவ்வம்மையாரே வித்தியாதனத்துக்கு அஸ்திவாரமாயிருக்கும் பொக்கிஷமாலி என்னும் ஆங்கில பத்திரிகையின் ஸ்தாபகராவர். அநேக வருஷங்களுக்கு முன் இம்மாது சிரோன்மணி தமது 11ம் வயதில் தனது பெற்றோருடன் சுயதேசமாகிய அமெரிக்காவை விட்டு மெக்ஸிகோ நகரில் வசிக்க நேரிட்டது அருமையான பெற்றோரும் சகோதரர்களும் இருந்த போதிலும் தன் வயதுப் பிள்ளைகளின் தோழமை இல்லாமல் இச்சிறு பெண் வருந்தினாள். மூன்று வாரத்துக்கொருமுறைதான் கடிதங்கள் வரும். அப்பொழுதும் சிறு பெண்ணாகிய அவளுக்குக் கடிதம் வருவது சந்தேகமே



ஒருநாள் கிளமெண்டினாவின் தாயாருடைய சிநேகிதி, "உன் மகளுக்கு ஒரு பாலர் பத்திரிகைக்கு சந்தா அனுப்பியிருக்கிறேன் மாதந்தோறும் அது அவளுக்குக் கிடைக்கும்" என்று கடிதம் எழுதினார்கள். அந்த சங்கதி கிளமெண்டினாவுக்கு அளவில்லா ஆனந்தத்தை உண்டாக்கியது. பத்திரிகை வந்த பொழுதோ அவள் பேரானந்தமடைந்தனள். அவள் வயதுக்கேற்ற கதைகளும், விஞ்ஞானக் குறிப்புகளும், ரசம் பொருந்திய கட்டுரைகளும் அவளை அகமகிழ்விக்கச் செய்தன. திரும்பவும் அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்தது போல் இருந்தது. மாதந்தோறும் அமெரிக்காவிலிருந்து ஒருபுது சிநேகிதி வருவது போல அப்பத்திரிகையின் வரவேற்பு இருந்தது.

அநேக வருஷங்கள் சென்றன. அம்மையார் இந்தியாவுக்கு வந்து அதன் பல பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். தேசத்தின் மேல அளவில்லாத வாஞ்சை கொண்டனர். ஆகவே இந்தியப் பிள்ளைகளுக்கும் வாசிக்க ஒரு நல்ல பத்திரிகை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஆவல் உண்டாயிற்று. ஆனால் அது இலேசான காரியமல்ல. இதற்கு வேண்டிய பணம் சேர்க்கவும், ஆதரவு சம்பாதிக்கவும், தகுதியான பத்திராதிபர் கண்டு பிடிக்கவும் எவ்வளவோ பிரயாசம் வேண்டியிருந்தது. எப்படியும் அரும் பிரயாசத்துடன் இவற்றை சித்திபெறவைத்து 1922ம் வருஷத்தில் இப்பத்திரிகை ஆங்கிலத்தில் வெளி வந்தது இந்தியா முழுவதும் இவ்வரிய பத்திரிகை ஆவலுடன் வாசிக்கப்பட்டபடியினால் பொதுப் பாஷையிலேயே வெளி வந்தது. 1923ம் வருஷத்தில் இப்பத்திரிகை உருது பாஷையில் வெளிவந்தது. 1924ம் வருடம் மராத்தியில் மொழி பெயர்க்கப்பட்டது. 1925ம் வருஷத்தில் தமிழில் வெளி வந்தது. 1928ம் வருஷம் குஜராத்தி பாஷையில் வெளி வந்தது. இதே சமயம் ஹிந்தியிலும்,

மொழி பெயர்க்கப் பட்டது. 1930ம் வருஷத்தில் தெலுங்கில் இப்பத்திரிகை வெளியானது. 1929ம் வருஷத்தில் மலையாளத்தில் மொழி பெயர்க்கப் பட்டது 1931ம் வருஷத்தில் பர்மாவிலும், வங்காளத்திலும் வெளியானது. ஆகவே இப்பொழுது 9 பாஷைகளில் வெளியாகி வருகின்றது.

ஒருசிறு பெண்ணின் ஆவலும் பிறநலப் பிரியமும் எவ்வளவு மகத்தான கிரியைகளை செய்து விட்டதல்லவா ?

—o—

## ஸ்ரீ தியாக ராஜர்

ஸ்ரீ தியாக ராஜாவின் நூற்றாண்டு உற்சவம் இவ்வருஷம் ஜனுவரி 11ம் தேதி நடந்தேறியது. அவர் மரித்து சுமார் 100 ஆண்டுகளான போதிலும் அவரது பாடல்கள் நம் நாட்டு சங்கீதப் பிரியர்களால் போற்றி பாடப்பட்டு வருகின்றன.

தியாகராஜா சிறுவராயிருக்கையிலேயே சங்கீத ஞானம் பெற்று பாக்கள் இயற்றுவதில் வல்லவராக விளங்கினர். தூய்மையான வாழ்க்கை நடத்துவதில் விருப்பங் கொண்டார். அவரது சமகால புலவர்கள் பாரதியார் முத்துசாமி தீக்ஷிதர், சியாம சாஸ்திரிகள் முதலியோராவர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிக்கிணங்க அவர் பிற்காலத்தில் பெரிய மனிதனாக விளங்குவார் என்பதற்குரிய அடையாளங்கள் பல அவரது இளமையிலேயேக் காணப்பட்டன அவர் முதலில் கட்டிய பாடல்கள் யாவும் அவரின் மேலே எழுதப்பட்டன. அவர் முதலில் கட்டிய பாக்களுக்கு திவ்விய நாம கீர்த்தனைகள் என்று பெயர் வழங்கலாயின. கீர்த்திபெற்ற சங்கீத வித்வான்களும், பொது மக்களும் ராஜாவும் கூட தியாகராஜரின் கவி கட்டும் வல்லமையைப் புகழ்ந்து அவருக்கு நாரதர் என்ற பெயரிட்டனர். அவரோ தூய்மையும் எளிமையுமான வாழ்க்கையை நடத்தி வந்தார். அவரது மனைவியான பார்வதியம்மையார் அவருக்கு முன் மரணமடைந்தார்.

தியாகராஜரால் 24,000 கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளன எனத்தெரிகிறது. அவைகளில் உற்சவம் பரதயா கீர்த்தனைகளும், திவ்விய நாம கீர்த்தனைகளும் முக்கியமானவை. அவர் சில நாடகங்களும் எழுதியுள்ளார். அவைகளில் ஒன்றான பிரஹலாதனின் பக்தி விஜயம் அவருக்கு இராமபிரான்மீதிருந்த அன்பை வெளிப்படுத்துகிறது அவர் தென்னிந்தியாவிலுள்ள பற்பல இடங்களிலுள்ள கோவில்களை சுற்றிப்பார்த்து வந்த சமயங்களில் அவர் ஆங்காங்கே எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கு ஏற்ப பற்பல அருமையான கீர்த்தனைகள் பாடியுள்ளார். மேலும் வால்மீகி இராமாயணத்திலாவது கம்பாது இராமாயணத்திலாவது சொல்லப்படாத அநேக சம்பவங்கள் அவரது கீர்த்தனைகளில் பாடப்பட்டுள்ளன.

தியாகையரின் நடை எளிதாயும், தெளிவாயும் இன்னோசையை உடையதாயும் காணப்படு



ஸ்ரீ தியாக ராஜர்

கிறது. அவரது கருத்துக்கள் உயர்ந்த நோக்கமுடையனவாயும் மனத்தைக் கவர்வனவாயும் இருக்கின்றன. அவை ஒழுங்காக ஒன்றின் பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்ததால் அவை மனதில் படம்போல் சித்தரிக்கக் கூடியனவாய் இருக்கின்றன. அவர் பாடிய கீர்த்தனைகள் ஒரே ராகத்தில் பாடக்கூடியனவா யிருந்தபோதிலும் அவைகள் பொருளாழமும் சொல்லாழமும் கூடியனவா யிருக்கின்றன.



தியாகராஜர் 1847ம் ஆண்டு ஜனுவரி மாதம் 6ம் தேதி இவ்வுலகினின்று மறைந்தார். அவர் தமது மரணத்தைக்குறித்தும் அதற்குபின்நடக்கப்போகிற ஒரு ஆச்சரியமான சம்பவத்தைக் குறித்தும் முன்னதாகவே ஞான திருஷ்டியினால் அறிவித்தார். அவரது ஆவி உடலை விட்டுப் பிரிந்தவுடனே ஒரு விதமான தெய்வீக நாதம் அவ்வறையை நிரப்பியது. ஒரு விதமான ஜோதி வீசியது. அவர் தாம் மரிப்பதற்குமுன் சந்நியாசம் வாங்கிக்கொண்டபடியினாலே அவர் ஒரு சுவாமியாகவே கருதப்பட்டு வருகிறார்.

பிரதி வருஷம் அவரது நினைவுகூருதலின் நாள் சிறப்பாக திருவையாற்றில் நடைபெற்று வருகிறது அச்சமயத்தில் தென்னிந்தியாவில் பல விடங்களிலிருந்தும் சங்கீத பிரியர்கள் திருவையாற்றிலுள்ள அவரது சமாதியண்டைக்கூடி தியாகராஜரது ஆசீர்வாதத்திற்காகவும் இராமபிரானின் ஆசீர்வாதத்திற்காகவும் பிரார்த்திப்பார்[illegible]

## பிரகாசமான தேசம்

(தொடர்கதை)

### 6ம் அதிகாரம்

ஆண்டவர் தமது சித்தத்தின்படி நடத்துகிறார்

பவுல் தன் பாட்டன் வீட்டுக்கு வந்தபோது ஒரு செய்தியைக் கேட்டான். அதாவது மார்ட்டின் ஒரு கடிதத்தை எழுதியிருந்தான். அதில் அவன் எழுதினதாவது "நான் ஐப்போ அவ்விடம் வரவேண்டும். ஆனால் என் மனைவியை தனியே விடக்கூடாது. அவளையும் கூட்டி வருவேன். அவள் நமது பவுலோடு சேர்ந்து பழக்கமானால் அவளுக்கு ஒருவிதமான ஆறுதல் உண்டாகுமென்று நம்புகிறேன்" என்பது. பாலன் இதற்குச் சந்தோஷமாய்ச் சம்மதித்தான். குடிசையிலே போதுமான இடம் இருக்கும். அவர் நீரும் வரட்டும் என்றான்.

இதினிமித்தம் பவுல் தேவதாசனிடம் திரும்பிப் போகக்கூடாதென்று பாட்டன் அவனைத் தடுத்தான். அதினாலே பவுல் அதிக விசனப்பட்டான். எவ்வளவு கெஞ்சிக் கேட்டாலும் அவனுக்கு உத்தரவு கிடைக்கவில்லை. அதைக கண்டுபவுலவருத்தத்தோடு தண்ணீர்கொண்டுவர கிணற்றுக்குப் போகும்போது தரையிலே முகம் குப்புற விழுந்து தேம்பித் தேம்பி அழுதான்.

ஆண்டவரே நான் தேவதாஸன் ஐயாவிடம் போய் வேலை செய்ய ஆசையாயிருக்கிறேன், போகக்கூடாதா ? என்று ஜெபித்தான்.

அப்பொழுது அவன் மனதிலே "உன்னை அறியாத வழியிலே நடத்துவேன்" என்ற சத்தம் தெரிவித்தது. அவன் சமாதானத்தோடு வீட்டுக்குப் போனான். அவன் இனிமேல தன் இடத்[illegible] பாட்டனோடு படிக்க வேண்டுமென்று அறிந்தபோது இயேசுநாதர் இங்கேயும் வருவார், என்றான். அப்புறம் அவன் இந்தச் சங்கதியை தேவதாசனிடம் அறிவிக்கும்படி ஒரு காட்டுக் காவற்காரனைக் கேட்கப் போனான். அந்த வீட்டிலே தேவதாசன் தானே நின்றதைக் கண்டு துக்கத்தோடு அவனிடம் அறிவித்தான். தாசன் அதைக் கேட்டு விசனப்பட்டாலும் பவுலுக்கு கொஞ்சம் புத்தி சொல்லி "நீ ஆண்டவருடைய பிள்ளை அல்லவா ? அவர் இஷ்டப்படி நடப்பேன் என்று வாக்குக் கொடுத்தாய். இது அவருடைய சித்தமானால் நீ ஏன் விசனப்படுகிறாய்" என்றான். அதற்கு அவன் நான் உம்மைவிட்டு மார்ட்டினுக்கும் அவன் மனைவிக்கும் உதவி செய்யவேண்டும் என்பது இயேசுவானவர் சித்தம்மா ? என்று கேட்டான். ஆமா, இதுவே அவருடைய சித்தம் என்றான்.

நான் அவர்களுக்கு உதவி செய்தால், யேசுவானவர் வேலைதானா ? அவர்களது சிறு மகனைக் கண்டுபிடிக்க முடியுமானால் அது நலமாயிருக்கும் என்று பவுல் சொன்னான்.

தேவதாசன் ஆச்சரியப்பட்டு, அது என்ன? என்று கேட்டதற்கு பவுல் அவனுக்கு அந்தச் சங்கதி சொன்னான்.

ஏழு அல்லது எட்டு வருஷம் என்று பதில் அளித்தான். உனக்கு வயசென்ன ? என்பதற்கு ஒன்பது வயசு, என்று பவுல் சொன்னான் அதற்கு தேவதாசன், இந்தச் சங்கதி உன் பாட்டனுக்குத் தெரியுமா ? என்றுகேட்டான்.



சென்னை 00

இல்லவே இல்லை, சொல்லக்கூடாது என்று என் மாமனுகிய மார்ட்டின் எனக்குச் சொன்னார் என்றான். இருக்கட்டும், அந்த மகனைக் கண்டு பிடிப்போம் என்று நினைக்கிறேன். நீ தான் அவர்களுக்கு உதவி செய்வது நல்லது, என்று தேவதாசன் சொன்னான். இந்த வேலைக்கு ஆண்டவர் என்னைக் கூப்பிட்டதாக நான் நினைக்கவில்லையே. ஐயோ, நான் பாவஞ் செய்தேன் என்று பவுல் விசனத்தோடு சொன்னான். அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டு ஜெபித்த பிறகு தேவதாசன் அவனுக்காக ஜெபித்து, அவனை ஆசீர்வதித்தான். அவன் தன் கையில் கொண்டு வந்திருந்த புதியேற்பாட்டுப் புஸ்தகத்தையும் பவுலுக்குக் கொடுத்தான். தேவதாசன் பவுலை அவன் பாட்டன் குடிசைக்குக் கூட்டிக்கொண்டுபோய் பையனின் சம்பளப்பணத்தை அவன் பாட்டன் கையிலே கொடுத்து விட்டுப் போய்விட்டான்.

பாலன் அதை வாங்கி சந்தோஷப்பட்டு, உன் புஸ்தகத்தில் சொன்னது போல; முதலாவது, தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் கொடுக்கப்படும் என்பது. நிசந் தானே என்று கர்த்தரை ஸ்தோத்திரித்தான்

மார்ட்டினும் அவன் மனைவியும் வருவது நமக்குக் கொஞ்சம் சங்கடமாயிருக்குமென்று பாலன் நினைத்தாலும் மார்ட்டினிமித்தம் சம்மதித்தான்.

அந்த இரண்டு பேரும் பிரயாணம் செய்து களைப்பாயிருந்தபடியால, கூடிய சீக்கிரம் படுத்துக்கொண்டார்கள். அவர்கள் வந்த அடுத்த நாள் காலையில் பாலன் அந்தம்மாளைக் கவனித்து அவள் துக்கமான முகத்தைக்கண்டு அவள்மேல் பரிதாபமாயிருந்தான். அதுமுதல் அவள் வீட்டுவேலைகளைப் பார்த்துக்கொண்டு சமையல் செய்து, மற்ற நேரங்களில் தையல்களும் தைப்பாள். பவுலும் எப்போதும் அவளுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருந்தபடியால் அந்தம்மாள் அவனோடு இருக்கும்போது தன் துக்கத்தை மறந்து விட்டாள். பாலனும் மார்ட்டினும் இதைக் கவனித்துச் சந்தோஷப்பட்டார்கள். அவளை இங்கே கூட்டிவந்தது நல்லது தான் என்று பாலன் சொன்னான். அந்தம்மாள் வீட்டுவேலை செய்து பவுலோடு கூட பழங்களையும் கிழங்குகளையும் பொறுக்கப் போவாள். அவனும் அவளிடம் அந்தப் பிரகாசமான தேசத்தைப்பற்றிச் சொல்லி, அந்தக் கோவிலைப் பார்க்க கூட்டிக் கொண்டு போனான்.

ஒரு நாள் அவள் துக்கமாயிருப்பதை அவன் கண்டு அம்மா நீங்கள் துக்கப்பட வேண்டாம். உங்கள் மகனை நினைக்கிறீர்கள். பயப்படவேண்டாம் அவனைக் கண்டு பிடிப்போம் என்றாள்.

அதற்கு அவள் அவனை அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள் அப்போது தன் மகனைப்பற்றி அவனிடத்தில் பேசினாள்.

அவன் பேர் என்னவென்று அவன் கேட்ட போது அவள், அவன்பேர் மீகேல். நான் இங்கே வந்தபிறகு என்மேல் இருந்தபாரம் நீங்கிவிட்டது போல தெரிகிறது. நீயும் எனக்கு நல்ல ஆறுதலாயிருக்கிறாய் என்றாள்.

உங்களுடனே இருக்கிறது எனக்கும் அதிக சந்தோஷம் என்று பவுல் மறுமொழியிட்டான். அப்படியே அவர்கள் இருவரும் அவள் மகனுக்காக ஜெபித்து வந்தார்கள். அவள் முந்தி தன் புருஷனுக்குக் காண்பித்த வருத்தத்தை விட்டுப் போட்டு, அவரிடம் இன்பமாய்ப் பேசி, புஸ்தகத்தை வாசிக்கும் போது கவனமாய் கேட்பாள். இயேசு நாதரைத் தேடிவந்தார்கள். மனைவிக்கு பூரண மனசுகத்தைத் தரவேண்டுமென்று ஜெபித்தார்கள். புஸ்தகத்தை வாசிக்க வாசிக்க பிரகாசமான தேசத்தைத் தேடினார்கள்.

## 7ம் அதிகாரம்

### தேவதாசன் வியாதிப்பட்டான்

இப்படியிருக்க பவுல அடிக்கடி தன் சிநேகிதனுகிய தேவதாசனை நினைத்து அவனைப் பார்க்க விரும்பினான். ஒரு ஞாயிறு அந்தக் காவற்காரன் வீட்டுக்குப் போக சமயம் வாய்த்தது. அவனிருந்த அம்மாளுக்கு பழங்கள் கொண்டுபோய் கொடுத்தான். அந்தம்மாள் அவனுக்கு பலகாரங்கள் கொடுத்தாள், பவுல் தேவதாசன் சுகத்தைப்பற்றி விசாரித்தான். அதற்கு அவள், அவருக்கு நல்ல சுகம்தான். இந்த ஞாயிற்றுக்கிழமை அவர் பிரசங்கம் ஆச்சரியமானது. அதில் அவர் நான் இப்பொழுது இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மறுபிறப்பைப் பெற்றதினால் உங்களுக்கு அந்த வழியைக்காண்பிக்கிறேன் என்றார். எல்லாரும் அந்த பிரசங்கத்தைக் கேட்டு உணர்வடைந்தவர்களாய் போனார்கள் என்றாள்.



பவுல் அதைக்கேட்டு அதெல்லாம் என் புஸ்தகத்திலேயே வாசித்தார். நாங்கள் அடிக்கடி சேர்ந்து அதை வாசித்திருக்கிறோம் என்றான்.

அவன் அந்தபுஸ்தகத்தை அவளுக்கு காண்பித்த போது, அதை எனக்குத் தரவேண்டும் என்றாள். அவனே அதைப் பூராவாய் வாசிக்கவில்லை. மார்ட்டின் அம்மாளுக்கு வாசித்துக் காட்டுகிறேன், என்றாள் அந்தம்மாள், அந்த உபாத்தியாயரிடம் அந்த மாதிரி புஸ்தகம் ஒன்று இருந்தால் எனக்காக வாங்கிவா என்று அவனை தேவதாசனிடம் அனுப்பினான். பவுல் சீக்கிரமாய் தேவதாசன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். தேவதாசன் வியாதிபட்டதினால் படுத்திருந்தான். பவுல் இதைக் கண்டு விசனப்பட்டு, ஆண்டவரே, இவரை சுகப்படுத்த வேண்டும என்று துக்கத்தோடும் ஊக்கத்தோடும் ஜெபம் பண்ணினான். தேவதாசனும் கூட ஜெபம் பண்ணி, ஆண்டவர் என்னைத் தயவாய்ச் சுகப்படுத்தினால் நான் இனிமேல என் ஜனங்களை மெய்யான வெளிச்சத்திலே நடப்பிப்பேன் என்றான்.

பின்பு பவுல், கொண்டுவந்த பலகாரங்களைக் கொடுத்தான். இரண்டு பேரும் சாப்பிட்டார்கள். அந்தக் காவற்காரன் மனைவி சொன்னதை நினைத்து ஒரு புஸ்தகத்தைக் கேட்டான். உடனே தேவதாசன் சந்தோஷப்பட்டு ஒரு புஸ்தகத்தை எடுத்து அதில சில வாக்கியங்களை எழுதினான். எபேசியர் 2, 8, 9 தீத்து 3: 5, 7, காலத்தியர் 3: 13, எழுதி, ஜெபம்பண்ணி புஸ்தகத்தை கையில் கொடுத்தான். பவுலோடுகூட கொஞ்சம் தூரம் நடந்தான். அவனை விட்டுப்போக பவுலுக்கு மனமில்லை.

உன் பாட்டனரை நாளைக்கு என்னைப் பார்க்க வரவேண்டுமென்று சொல்லி பவுலை வழி அனுப்பினான். பவுல் பாட்டனிடத்தில் போய் அதைச் சொன்னதும் அவன் விசனப்பட்டு, என்னை ஏன் கூப்பிடுகிறார், பையனை மறுபடியும் அனுப்ப வேணுமென்றிருப்பாரோ என்றான். இருட்டிவிட்டதால எல்லாரும் படுத்துத் தூங்கினார்கள். அடுத்தநாள் காலையில் பாலன் தேவதாசனைப் பார்க்கப் புறப்பட்டு போனான். தேவதாசன் வீட்டில் சேர்ந்த போது அவன் அதிக சுகவீனமானதைக் கண்டு விசனப்பட்டு பரிதபித்தான். அவனுக்கு க்ஷய வியாதி இருந்தாற்போல தெரிந்தது. ரத்தம் கக்கினதினால் அதிகப்பெலவீனமானான். ஆனால் கட்டாயமாய் இவனைப் பார்க்க ஆசைப்பட்டதினால் உள்ளேபோனான். தேவதாசன் அவன் கையைப் பிடித்து முகத்தைக் கவனித்துப் பார்த்தான். பவுலைப் பற்றிப் பேசி, நீ அவன் பாட்டனல்லவென்றும் அவன் தாய் தகப்பன் அறியாமல அவனைக் கண்டுபிடித்து வளர்க்கிறதாகவும், எனக்குச் சொன்னாயல்லவா? மார்ட்டினும் அவன் மனைவியும் பிள்ளை காணமல் போனதினால் துக்கப்படுவதாகவும் கேள்விப் பட்டிருக்கிறேன் என்றான். இது எனக்குத் தெரியாது என்று பாலன் சொன்னபோது தேவதாசன், நீ உடனே போய், பவுலைப்பற்றி உனக்குத் தெரிந்த மட்டும் மார்ட்டினிடத்தில் சொல், இவர்கள்தான் பவுலின் பெற்றோர் என்று நினைக்கிறேன். தவிர பவுலை எனக்கு கொஞ்ச நாளைக்கு அனுப்பு, நான் சீக்கிரமாய் இறந்து போவேன. இந்த கடைசி நாட்களில் அவன் என் கூட இருக்க ஆசைப்படுகிறேன் என்றான். பாலன், அவனை அனுப்புவேன் என்று வாக்கு கொடுத்துச் சீக்கிரமாய்த் தன் குடிசைக்கு வந்து சேர்ந்தான். பவுலை அனுப்பவேண்டுமென்று பாலன் சொன்னதைக்கேட்டு, மார்ட்டின் அதிகக் கோபமாயிருந்தான். ஆனால் பாலன் அவனைக்கூப்பிட்டுத் தனியாய் பேச ஆரம்பித்தபோது அவன் கவனித்துக் கேட்டான்.

முந்தி உங்களுக்கு ஒரு பிள்ளை இருந்தது. அது காட்டிலே காணாமற்போனது நிசந்தானா? என்று பாலன் விசாரித்தான். ஆமா, நிசந்தான். ஒன்பது வருஷமாகிறது என்றான். அப்பொழுது பாலன், பவுல் தன் கையில் அகப்பட்ட விதத்தை சொன்னபோது அவனே என் மகன், என்று அறிந்துகொண்டு ஆச்சரியப் பட்டான்.

பாலன் எழுந்திருந்து, உடனே பவுல் தேவதாசனிடம் போகவேண்டுமென்று அனுப்பி விட்டான். மற்ற சங்கதியை அவனுக்குச் சொல்லவில்லை.

பவுல் போனதைப்பற்றி மார்ட்டின் மனைவி துக்கப்பட்டாள். அவளுக்கு அந்தச் சந்தோஷ செய்தியைச் சொல்ல பயப்பட்டார்கள். ஆனால் பாலன் அவளிடம், பவுலை உனக்கு

மகனுக்கு கொடுத்தால், உன் மகனை இனித் தேடக்கூடாது என்றான்.

அவள் சம்மதித்தாள்.

அவள் மார்ட்டினிடம் ஓடி, ஐயா, பவுலை எனக்கு மகனாகக் கொடுக்கப் போகிறான் என்று சந்தோஷத்தோடு சொன்னாள்.

மார்ட்டின் அதைக்கேட்டு சந்தோஷப் பட்டு, பவுல சீக்கிரமாய் வருவான். அது மட்டும் பொருமையாய் இரு என்றான்.

அவள் தண்ணீர் மொண்டுகொள்ள போன போது மார்ட்டின் பாலனிடம் நன்றியோடு பேசினான்.

—:o:—

209K02

## காணிக்கை சடங்கு

தலைவி:— நீங்கள் யார்? என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?

நீலபட்சி:—நாங்கள் வழிகாட்டி இயக்கத்தின் பாலர்கள் நீலப்பட்சி என்னும் நாமமுடையோர். "கை கொடுத்துதவு." என்னும் பிரமாணத்தை சிரமேற்கொண்டு அற்ப காரியத்திலும் உண்மை என்னும் காணிக்கையையே சமர்ப்பிக்கிறோம்.

தலைவி:—மிகவும் சந்தோஷம் உங்கள் காணிக்கையை அன்புடன் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

தலைவி:—நீங்கள் யார்?

வழிகாட்டி:—நாங்கள் எல்லோருக்கும் சிநேகிதர். வழிகாட்டி என்னும் நாமமுடையோர் "ஆயத்தமாயிரு" என்பது எமது பிரமாணம் உற்சாகமான ஊழியம் எமது காணிக்கை.

தலைவி:—உங்கள் வரவு நல் வரவு ஆகுக.

தலைவி:—நீங்கள் யார்?

ரேஞ்சர்:—ரேஞ்சர் என்னும் பெயருடைய நாங்கள் இயக்கத்தின் மூத்த சகோதரிகள். "தயாராயிரு" என்னும் பிரமாணத்தை கைப்பிடித்து இப்பரந்த உலகினில் உண்மையான ஊழியம் செய்வதே எமது காணிக்கை.

தலைவி:—மிகவும் சந்தோஷம். கடவுள் உமது ஊழியத்தை ஆசீர்வதிப்பாராக.

தலைவி:—நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?

காடட் ரேஞ்சர்:—பிற்காலத்திய வழிகாட்டித் தலைவர்களாகிய நாங்கள் கடேற் ரேஞ்சர் என்னும் நாமமுடையோர் "ஆயத்தமாயிரு" என்பது எங்கள் பிரமாணம். மேன்மையான வழி நடத்தல் எங்கள் காணிக்கை.

தலைவி:—நீங்கள் யார்?

துன்பத்தை சகிக்கும் பரதேசிகள் நாங்கள். எக்ஸ்டென்ஷன் வழிகாட்டிகள் எங்களதுபெயர். ஆயத்தமாயிரு என்னும் பிரமாணத்தை சிரமேற்கொண்டு, உறுதிப்பாடு என்னும் காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.

தலைவி:—துன்பத்தை இன்பமாக்கும் வீரமக்களே உங்களை அன்புடன் வரவேற்றுகிறோம்.

தலைவி:—நீங்கள் யார் எங்கிருந்து வந்தீர்கள்?

இ. வ.:—மலைகடல் சூழ, பரந்த வெளிகளும், பெரும் நதிகளும் உடைய பாரத நாயின் அருமை மக்கள் நாம். துன்பமாகிய மந்தாரத்தில் ஆனந்தமாகிய சூரிய வெளிச்சத்தை பரவச் செய்வதே எமது காணிக்கை.

தலைவி:—மிகவும் சந்தோஷம் உங்கள் வேலை பண்மடங்கு ஆசீர்வதிக்கப்படுவதாக.

தலைவி:—நீங்கள்யார் எங்கிருந்து வந்தீர்கள்?

உ.வ:—பூலோகத்தின் நாலா திசைகளிலுமிருந்து வந்திருக்கிறோம். உலக வழிகாட்டி எங்களது நாமம். ஆயத்தமாயிரு என்னும் பிரமாணத்தை சிரமேற் கொண்டு ஐக்கியம் என்னும் காணிக்கையைக் கொண்டு வந்திருக்கிறோம்.

தலைவி:—உங்கள் காணிக்கையே உலகத்திற்கு மிகவும் தேவை. உங்கள் வரவு நல்வரவு ஆவதாக.

தலைவி:—(நெருப்பை மூட்டிவிட்டு) எல்லாவற்றையும் அறிந்திருக்கிற எங்கள் ஆண்டவனே எங்கள் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டு, அவைகளை ஆசீர்வதித்து உலகத்துக்கு பிரயோஜன மாக்கியருளும்.



# சாரணர் பகுதி

## வழிகாட்டிகளுக்கான பாட்டுகள்

### 1. காணமற்போன குழந்தை

1 என் குழந்தையை காணோமே
காணோமே, காணோமே
என் குழந்தையைக் காணோமே
நாகப்பழம் பொறுக்கையில்

பல்லவி

ஆரிராரோ, ரோரரோ, போரரோ, ரோரரோ
ஆரிராரோ, ரோரரோ, என் குழந்தையைக் காணோமே.

2 வெள்ளெலி நான் பார்த்தேனே, பார்த்தேனே
என் குழந்தையைக் காணோமே

3 குரங்குக் கூட்டம் கண்டேனே
என் குழந்தையைக் காணோமே.

4 நாகம் தலையில் மாணிக்கம்
என் குழந்தையைக் காணோமே.

### 2. காசா நாட்டு கடை

காசா நாட்டு கடைக்குப் போனேன் சின்ன மாமா
காசுக்கு இரண்டு குருவி வாங்கினேன் சின்ன மாமா
அறுத்து சிறத்து அடுப்பிலே போட்டேன் சின்ன மாமா
திறந்து பார்த்தால் பறந்து போச்சுது சின்ன மாமா

### 3. சுகுணன் சுகுணி கலியாணம்

1 சுகுணன் சுகுணிக்கு கலியாணம்
எல்லோருக்கும் கொண்டாட்டம்
சுகுணன் என்பது எலிதானே
சுகுணி மற்றொரு எலிதானே.

2 கலியாணமோ வெகு மோடி
விருந்தினரோ ஒரு கோடி
வாழைப்பழமும் தாம்பூலம்
வந்தவர்க் கெல்லாம் சந்தனம்.

3 விருந்து பலமாய் நடந்தது
சந்தடி ஊரெல்லாம் கேட்டது
பூனை ஒன்று வந்தது
எலிகள் ஓட்டம் பிடித்தது.

—:o:—

# நெய்யும் மோரும் கலந்துண்ணல்



செய்யும் மோரும் கலந்துண்டேன்
தேனும் பாலும் சேர்த்துண்டேன்
உட்கார்ந்த இடத்தை விட்டகலேன்
உடலை என்றும் அசைத்தறியேன்.

பாலரே பாடம் படித்திடுவீர்
பாங்காய் உண்டியை வெறுத்திடுவீர்
ஓடியாடிக் களித்திடுவீர்
உல்லாசமாகப் பாடிடுவீர்.

**TAMIL TREASURE CHEST**

வித்யா தலை

*Editor*: Miss Getsie Samuel, All Saints' S.P.G. Training School for Women, Puth
Trichinopoly. *Rates*: Re. 1 per copy per annum. Subscriptions may be sent to the Publish
Printed and Published by Mr. Lewis Gideon at the N.M.S. Press, 48-c, Peter's R
Royapettah, Madras 520 Copies 30—5—1947. Paper issued card No. 29